
# தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 5 | சென்னை 6-9-58 சனிக்கிழமை | இதழ் 12

## மக்கள் கலைஞர்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தனியொரு மனிதரல்ல; அவர் ஓர் சகாப்தம். அவரோடு அந்த சகாப்தமும் முடிந்துவிட்டது. அப்படிப்பட்ட ஓர் சகாப்தம் இனித் தோன்றுவது அரிது.

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க முடியும்; மக்களின் கை தட்டலையும், மாலைகளையும் பெற முடியும்; நல்லதோர் புகழையும் அடையமுடியும். ஆனால் நம் கலைவாணருக்குக் கிடைத்த புகழுக்கும் மற்றவர்களுக்குக் கிடைக்கும் புகழுக்கும் வேறுபாடு உண்டு.

கலைவாணர், மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர். உலகிலேயே இவர் ஒருவர்தான் மக்களிடத்திலே தொடர்புகொண்டு, மக்களுக்காக உழைத்த கலைஞராவார். இவரைப் போன்ற, , நல்ல உள்ளம் படைத்தவர்கள் நாட்டிலே இருப்பது மிக அபூர்வம்.

மக்களின் மன அழுக்கு நீங்க-மூடநம்பிக்கை அகல - குருட்டுப் பழக்க வழக்கங்கள் ஒழிய - தாழ்ந்த மக்கள் தன்னுணர்ச்சி பெற இதுவரை இந்த நாட்டில் எந்த ஒரு நடிகனும் கலைவாணரைப்போல் பணியாற்ற முனைந்ததில்லை. இந்த நாட்டில் மட்டுமல்ல, மேலைநாடுகளிலுங்கூட இப்படிப்பட்ட ஓர் கலைஞன் இருந்ததுமில்லை; இருக்கவுமில்லை.

—அறிஞர் அண்ணா

# மாதவி



வணிகர் குலக் கோமான் கோவலனை வரித்துக்கொண்டு வாழ்வில் இன்பம் முழுதும் பெருமற் சென்ற கண்ணகியைக் கவலைக்கு இருப்பிடமாய் ஆக்கியவள் மாதவி. குன்றன்ன செல்வத்தைக்கொண்டு கொட்டச் செய்து கோவலனைப் பிறரறியாமல் குலமகள் கண்ணகியுடன் காட்டு வழி செல்லவும், மதுரைமா நகரில் கொலைப்படவும் காரணமானவள், மாதவி. இவையிற்றை நீக்கிப் பிறிதொன்று உரத்த குரலில் ஒலிக்கின்றது. குலமகளாம் கண்ணகியைக் கற்புக்கரசி என்று காட்டவும், உரைசால் பத்தினியாக, கடவுளாக ஆக்கவும் கருவேப்பிலையாக மாதவி பயன்பட்டாள், என்பதுதான்.

மாதவி! மூன்றெழுத்து முத்து அவள்! செந்தமிழ்க் கவிஞர் இளங்கோ அடிகள் இவ்வறச் செல்வியை நமக்குக் காட்டும்பொழுது, "ஆடலும், பாடலும், அழகும்" ஆகிய மூன்றும் அளவிற் குறையாமல் அமுதமாய்த் தோற்றுகின்றாள். இத்தகைய இன்பச் செல்வியைக் கருவேப்பிலையாகப் பயன்பட்டாள் என்கின்றனர் சில ஆய்வாளர்கள்.

கருவேப்பிலை-இஃது அனைவருக்கும் அறிமுகமானதே. உணவின் இடையில் ஊற்றப்படும் குழம்பில் இது உண்டு-குழம்பில் தவறாது காணப்படும் இலை இது. தப்பித் தவறி இந்தக் கருவேப்பிலை உணவில் கலந்து விழுந்துவிட்டால், கை தானாக அதை எடுத்து எறிந்து விடும். ஏன்? குழம்பின் மணத்திற்குமட்டுமே பயன்படும் கருவேப்பிலை உண்பதற்குப் பயன்படுவதில்லை. அதுபோல கண்ணகியைக் கற்பரசி என்று காட்ட மாதவி ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளாள் என்பர் சிலர்.

மாதவி கருவேப்பிலையாக, கண்ணகியை உயர்த்தும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டாளா? இத்தகைய வாதம் வலிவுடையதா? என ஆராய்வதுடன், மாதவிக்குரிய இடம் என்ன? என்பதையும் காண்போம்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குமுன் செந்தமிழ்த் திருநாட்டில் செல்வக் குடும்பங்கள் சிறந்து விளங்கின. செல்வர்கள் மணந்து மகிழ்ந்து பரத்தையர்பால் இன்பம் பெற்று இருந்த காலம் அது. கையில் தரப்படும் சில பொற் காசுகளுக்காகப் பொழுதெல்லாம் இன்பம் தருதற்கென்றே குலம் ஒன்று இருந்ததாம். காசிற்குக் கை நீட்டும் கணிகையர் குலம்தான் அது. கணிகையர் குலத்தின் பெருமையின் அளவைப் பெரும் கருப்புத் திரை கொண்டு மறைக்க இந்தக் குற்றச்சாட்டு பயன்படுகிறது. விரிந்து விளங்கிய தமிழகத்தில் சிறந்திருந்த கலை நாட்டியக் கலை. உடலை முழுதும் வளைத்து ஓர் இலட்சியக் கலையை, பிறரால் எளிதில் கற்க இயலாக் கலையைக் குலக்கலையாகக் கொண்ட ஒரு குடி கணிகையர் குடி. இந்த இணையற்ற குடிவழி வந்தவர் தமிழகத்தில் தாழ்வுபடுத்தப்பட்டிருக்கின்றனர். இத்தகு வழி வந்தவளே அறச் செல்வி மாதவி.

அறச்செல்வியாம் மாதவி கோவலனை ஏன் விரும்பினாள்? முன்னரே தனக்கென ஒரு மனைவியைப் பெற்ற கோவலனை மாதவி ஏன் விரும்பினாள்? கோவலனும் மாதவியும் முதல் முதல் எங்கே சந்தித்தார்கள்? கவிஞர் இளங்கோ அடிகள் விளக்கும் இடம் இதுதான். மாதவி அரசன்முன் நடனமாடி ஒரு முத்து மாலை பரிசுபெற்று வந்தாள். வந்தவளை, வரித்துக்கொண்டு பொருள் கொடுத்து இன்பம்பெற சித்திராபதி ஒரு கூனி கையில் மாலை கொடுத்து அம்மாலையை யார் ஆயிரம் கழஞ்சு பொன் தந்து வாங்குகிறார்களோ, அவர்க்குரியவள் என்று அனுப்புகிறாள். அரசன் திருமுன் ஆடியவள் என்றால் அவளைப் பற்றிய செய்திகள் அலையெனப் பரவியிருக்கக் கூடும். அத்தகையவளை அறிந்த அவனுக்கு, கூனி கை மாலை வழி காட்டியது என்றே முடிவுசெய்யலாம்.

"மாலை வாங்குநர்க்குச் சாலும் நம் கொடி" என்று முடிவு செய்தபோது, பலருக்கும் மாதவி இன்பம் தரும் இடமாக அமைவாளோ என்றே தோன்றும். ஆனால் கோவலனும் மாதவியும் கூடிய பின்னை அத்தகு எண்ணம் அறவே அகன்றுவிடுகின்றது. கோவலன் பிரிவும், மாதவி பரிவுக் கடிதங்களும், கோவலன் கொலையும், மாதவி அறச்செல்வியானமையும் இதற்கு அரண் செய்கின்றதன்றோ.

கண்ணகி மாட்டுப் பெறவியலாத பேற்றைக் கோவலன் மாதவியிடம் மணிமேகலையாகப் பெற்றான். பிறரால் எளிதில் தரவியலாத குலவிளக்கை கோவலனிடம் கொடுத்தவள் மாதவி. கண்ணகி பெண்தான் என்றாலும் கோவலனின் எதிர்காலக் குலவிளக்கைக் கொடுக்கவியலாக் குலக்கொடியே. இதனால் குறைவு என்பதில்லை. கண்ணகியுடன் சிலகாலம் இன்பம் துய்த்து மகிழ்ந்த கோவலன், பல காலம் வாழ்ந்து விளங்கும் குழந்தையைத் தேடியே மாதவிபால் மகிழ்ந்து தன் மனையகம் மறந்திருந்தான். விடுதல் அறியா விருப்பினன் ஆக இருந்தான். குழந்தையைப் பார்த்துக்கொண்டு குடும்பத்தை மறந்திருக்கக்கூடும். இது தவறா? தவறென்றால் கண்ணகிதான் இத்தவற்றிற்கு மையமாக அமைகின்றாள். எனவே இயலாமைக்காக ஏங்குவது இயற்கையின் குறைபாடுதான்.

கோவலன் மண்தேய்த்த புகழினன். பெருஞ்செல்வக்கோமான். செல்வத்தை எல்லாம் சுரண்டி ஓட்டாண்டியாக்கியவள் மாதவி. இந்த இழிந்த செயலை, குலத்தின் வழக்கம் என்று கூட்டிக்கூறி மாதவியை மாசுபடுத்தப் பயன்படுத்துகிறார்கள். வருந்துவதைவிட வேறு விளக்கம் வேறென்ன வேண்டும்? இளங்கோ அடிகள் வடித்துக்காட்டும் சிலம்பில் மாதவி கோவலனிடம் விரும்பிக் கேட்டதாக ஒரு பொருள் இருக்குமானால் அது அவனுடைய "அன்பு"தான். அவனுடைய தணியாத அன்புச் செல்வத்தை நீங்காமற் பெற முயன்றவள் மாதவி என்பதைக் கோவலன் பிரிவின் பின்னர்க் காணுகின்றோம். கோவலன் விரும்பி இருந்தால் மாதவி தன் மாளிகையையே மண்டியிட்டுக் கொடுத்திருப்பாள்-கொடுப்பதென்ன அவனுக்குரிமையானவற்றை அவனே எடுத்துக்கொண்டிருக்கலாம். கோவலன் மாதவி மாட்டுப் பொருள்களை வாரி வாரி இறைத்தான் என்றால், வழிவழிக்குலம் விளங்க மணிமேகலை என்னும் மாண்புடைய செல்வத்தைப் பெற்றவள் மாதவிதானே! மனம் மிக மகிழ்ந்து கோவலன் செல்வத்தை வாரி வழங்கியிருக்கக் கூடும். மேலும் தான் ஒரு பெருஞ்செல்வன் எனப் பிறருக்குக் காட்டவும் பெரும் பொருள் செலவிட்டிருக்கக்கூடும். இதைவிட்டு மாதவி கோவலனைப் பொருள் அனைத்தையும் தனக்கே தரும்படி விழைந்தாள் என குறை கூறுதல் அறிவுக்குப் பொருந்தாது.

மதுரை செல்ல கோவலன் ஏன் விழைந்தான்? பொலிவுடன் வாழ்ந்த வணிகக் கோமான் வனிதை கண்ணகியுடன் காட்டு வழியில் மதுரை போக ஏன் எண்ணினான்? குன்றன்ன செல்வம் அனைத்தும் மண்மேடான காரணத்தால்! ஏன்? தன் செல்வச் சிறப்புச் சிறந்து விளங்க வாணிபத்தில் எண்ணம் செல்லாமல் கணிகையாம் மாதவிபால் கொண்டு கொட்டியமையே! மாதவியும் பிறரும் தன் சிறப்பை உணர வேண்டும் என்பதற்காகத் தானாகவே, சிறப்புப் பெயர் பெறுதற்காகச் செல்வத்தை வாரி வழங்கி வறுமையில் வீழ்ந்தான். வறுமையும்கூடப் பிறரறியாது போக வேண்டும் என்பதற்காகச் சிலம்புடன் செல்வி கண்ணகியை இரவிலேயே அழைத்துச் சென்றுவிடுகின்றான். பிறர் தன்னைப் புகழ வேண்டும் என்பதற்காகப் புகழ் பெறவே தன் செல்வத்தை வழியறியாது வாரி இறைத்துவிட்டான் கோவலன். இதற்கு மாதவி எவ்வாறு பொறுப்பேற்கமுடியும்? மதுரைக்குச் சென்ற செய்தியும், கோவலன் கொலையும் இதன் அடிப்படையில் எழுப்பப்பட்ட வலுவற்ற மண் குன்று ஆகும். இதனை ஆய்ந்தால் உண்மை எனும் உரமுள்ள காற்றால் ஒன்றுமில்லா மேடாகி விடுதலில் வியப்பில்லை. தான் பொருள் இழந்தமைக்கு வருந்தும் கோவலன் வறுமைத்தேள் கொட்டிய பின்னர்தான் "மாதவி" காரணமோ எனக் கடிந்துரைக்கின்றான். இது கண்ணகியின் புன்னகையைப் பெறுதற்குப் புது வழியாகக்கூட புலப்படுகின்றது. ஏனெனில் மதுரை செல்லும் வழியில் பார்ப்பானிடம் "மாதவி தீதிலள்" என உரைத்தமையால் உள்ளத்தே உள்ளது வேறொன்று என்பதைக் காட்டுகிறது. எனவே தீதுடைமைக்குக் கோவலனே காரணம் என்பதற்கு அவன் சொல்லே எடுத்துக் காட்டாகும். எனவே மாதவியால் கோவலனின் குன்றன்ன செல்வம் கவரப்பட்டு, மதுரைக்குக் கற்பரசியுடன் விரட்டப்பட்டான் என்பது பொருந்தாக் கூற்றாகும்.

குலக்கொடியாம் கண்ணகியைக் கற்புக்கரசியாக, உரைசால் பத்தினித் தெய்வமாக ஆக்குதற்கு மாதவி ஒரு கருவியா? கண்ணகி - மாதவி இரண்டு மகளிரும் இருவேறு சிறப்புடையவர்கள். கண்ணகிக்கு முதலிடம் கொடுக்கத்தான் வேண்டும் என்ற தணியாத ஆர்வம் காரணமாக மாதவிக்குரிய இடத்தைக் கொடுக்க மறந்துவிடுகிறார்கள். மறதியோ அல்லது மறுப்போ அறியேன். காரணத்தை விளக்குவதைவிட உண்மையை ஆய்வோம்.

இளங்கோ அடிகள் காட்டும் மாதவி கணிகையர் வழிவந்த ஒரு கன்னிப்பெண். அவளது குலமுறை என்ன? காசுக்காகக் கற்பை கொடுக்கும் கணிகையர்குலம் - இந்த நிலை கி. பி. இரண்டில் இருந்ததாம்! அத்தகைய அறிவற்ற அழிவான செயலை அறவே ஒழிக்க வேண்டும் என்ற தணியாத ஆர்வமே மாதவி பாத்திரமாகும். இளங்கோ அடிகளின் உள்ளத்தில் எழும்பி எழும்பி அது மாதவிமூலம் சிலம்பில் ஒலிக்கின்றது எனலாம். வருங்கால வாழ்வில் செல்வத்திற்கா விலை கூறப்படும் சிறந்த பண்பைக் கணிகையர்குலம் கைவிடுதல் வேண்டும் என்று மாதவி வழி அமைக்கிறாள் என்பதில் ஐயமே இல்லை.

காசு பறிக்கும் குலம் கணிகையர் குலம் என்பது உண்மை. கணிகையர் வழிவந்த மாதவியும் காசு பறிக்கும் கும்பலில் மறையும் கணிகை அல்லள். பிரிந்த கோவலன் பொருள் எல்லாவற்றையும் இழந்து இனி இல்லில் வேறு வழி இல்லை என்ற நிலையில் மாதவி இரண்டு கடிதங்கள் ஏன் எழுதவேண்டும்? முதற் கடிதம் ஊடலின் விளைவு என்று தெரிகிறது. கோவலன் மீண்டும் தன்னிடம் வரவேமாட்டானோ என்ற கவலையின் விளைவே.

**"அடிகள் முன்னர்**
**யானடி வீழ்ந்தேன்**
**வடியாக் கிளவி**
**மனக்கொளல் வேண்டும்"**

என்று மாதவி எழுதுவது பொருள் எல்லாவற்றையும் தன்னிடத்தே விட்டு வறியனாய் மதுரை செல்லும் கோவலனை மாதவி பணிந்து வேண்ட வேண்டிய அவசியம் என்ன? மாதவி கோவலனிடம் அரும்பொருளை யாசிக்கவில்லை. அவன் அன்பை-அருட்குணத்தை-அழகுச் செல்வத்தை இரந்தாள் என்பதே. கோவலன் விட்டுச் சென்ற குன்றன்ன செல்வமே அவளின் எதிர்காலத்தைத் துயரின்றி இட்டுச்செல்லும். இல்லையெனில் வேறொரு கோவலன் கிடைக்காமலா இருப்பான்? மாதவி மறு கோவலர்களை மனம்கொள்ளும் மாது அல்லள் என்பதையே அவளது எதிர்கால வாழ்க்கை காட்டுகின்றது தான் விரும்பியவன் கோவலன்-கோவலனையன்றி வேறு காவலனை அவள் வாழ்வரசில் காணவில்லை.

மாதவி கணிகையர் வழிவந்தமையால் மாதவியின் மாண்பை ஒரு சிறிதும் குறைத்தல் கூடாது தன் குலத்து வழியில் வாழாமல் குலமகளிர் வழியில் வாழ்ந்தாள்; வாழ்ந்து காட்டியதோடு அன்றி வழிவந்த மகளையும் நல்வழிச் சேர்த்தாள்.

மதுர இசை எழுப்பும் மாதவி துயர ஒலி எழுப்பும் தோகையாக்கப்படுவதை அறிஞர் உலகம் ஒப்புமோ? கண்ணகி நல்லாளின் கற்புச் சிறப்புக்குப் பிறர் உதவி தேவை இல்லை என்பதே அக்காலம் காட்டும் உண்மை. ஆனால் மாதவி செயல் மாறுபட்ட, வேறுபட்ட வழி என்பதோடு - கணிகையர் குலமகளிரும் குலச்சிறப்புடன் வாழ்வதற்கு ஒரு வழிகாட்டி என்றால் மிகையில்லை. அத்தகு மாதவி நல்லாள் கண்ணகியை ஒத்த சிறப்புடைய நிலையை அடைந்தவள் என்றால் அவள் நிலை பிறரைவிட உயர்ந்ததே ஆகும். மாதவி ஒரு அறச்செல்வி-அன்புச் செல்வி-வழிகாட்டும் வனிதை என்று உரைத்தலே பொருந்தும்.

**—கதிரவன், பி. ஏ. (ஆனர்சு)**

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

# தென்றல்

மலர் 5 ‖ 6—9—58 ‖ இதழ் 12

# கலையா வாணன்

சிறந்ததோர் துயிலைத் தொட்டு(த்)
தேன்துளி மயக்கஞ் சேர்த்து(ப்)
பிறந்ததோர் குழவி யாய்நான்
பெரும்புவி மறந்த வேளை
பறந்துவந் தொருவன் சொன்னான் :
"பாரடா ! கலைஞன் வாணன்
இறந்தனன் ! ஐயோ ! அன்னான்
இனிநமக் கிலையே ! இல்லை !"

துள்ளிநான் எழுந்தேன் ! அந்தத்
தூயவன் முகத்தைப் பார்த்தேன் !
தெள்ளிய மனத்தி லார்ந்த
தேம்பலைக் கண்ணின் நீராய்
அள்ளிய நிலையில் தோழன்
அரற்றினன் ! யானோ அந்த(ப்)
'பிள்ளை'யின் துயரைக் கண்டு
பெருநகை வடித்தேன் ! ஆமாம் !

சாவதாம் ! முடிவாம் ! சோற்றுத்
தடியர்தாம் சாவார் ! செத்துப்
போவதால் மறைவார் ! இந்தப்
புவியுளார் துயருங் கொள்ளார் !
ஆவதே நினைத்த மன்னன்
அனைத்தையும் கொடுத்த வள்ளல்
சாவனோ ! இல்லை ! ஆங்கே
சாவெனல் வாழ்வின் தேக்கம் !

நாற்பதில் உடலஞ் சாய்ந்தால்
நானிலம் உளநாள் மட்டும்
நாற்பதே வயதில் வாழ்வான்
நல்லவன்; பிறர்க்கு வாழ்ந்தோன் !
பார்ப்பதோர் வடிவம், சாவில்
படுத்ததும், கண்கள் அன்று
பார்க்குமோர் உருவத் தைத்தான்
படமெனப் பிடித்துக் கொள்ளும் !

இன்னுமக் கலைவா ணன்தான்
எம்மொடும் இருந்து, மூத்து
'பொம்'மெனப் பருத்த தோள்கள்
'பொக்'குற விழுந்து, தாடி
வெண்மையி லாடிக் கண்கள்
விழுகுழிக் கிடந்து மாண்டால்
மென்மையில் லாத தான
வேறுரு நிற்கும் நெஞ்சில் !

இளமையில் மாண்டான், என்றும்
இளமையாய் வாழ எண்ணி !
கிழமையை நான்பெற் றாலும்
கிருட்டினன் உருவம் நெஞ்சில்
இளமையாய் நிற்கும் ! அன்று
எனக்கொரு பேரன் போல
"கிழவரே சுகமா ?" என்றே
கேலியாய்ச் சிரிப்பான் அன்றோ !

சிறியனாய் மறைந்தா னேனும்
சிறுமையில் மறைந்தா னில்லை !
அறிஞனாய் மறைந்தான் ! மக்கள்
அன்பனாய்ப் பிரிந்தான் ! வாழும்
வறிஞரின் தெய்வ மாக
வழியினை விட்டுச் சென்றான் !
பிரிந்தது மேனி ! அன்றே
பிறந்தனன் புகழில், ஞானி !

**கண்ணதாசன்**

# ★ எறும்புகள் ★

உலகில் வாழும் உயிர்களில் எறும்புகள் மிக விசித்திரமானவை. எறும்புகளின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து வந்த ஆராய்ச்சியாளர்கள் இயற்கையின் விசித்திரப் படைப்புகளில் எறும்புகள் முதன்மை பெறும் என அறிவித்துள்ளனர். இவ்வெறும்புகளிடமிருந்தும், பகுத்தறிவு பெற்ற மனித வர்க்கம் அறியவேண்டியது ஏராளமாக உள்ளது.

எறும்புகள் வெப்பமுள்ள நாடுகளிலும், மித வெப்பமுள்ள நாடுகளிலும் வாழ்கின்றன. எறும்புகளில் ஏறத்தாழ இரண்டாயிரம் வகைகள் உள்ளன வென்று உயிர் நூலறிஞர்கள் கூறுகின்றனர். எறும்புகளும் மனிதர்களைப் போலவே சமூக வாழ்வில் பற்றுக்கொண்டு கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. கட்டடங்களைக் கட்டிக்கொண்டு நகரங்களில் வசிக்கின்றன. பயிர் செய்கின்றன, தானியங்களைக் களஞ்சியங்களில் சேர்த்து வைக்கின்றன. பசுக்களை வளர்த்துப் பால் கறக்கின்றன என்பது போன்ற மிக வியப்பான செய்திகளை அறிவியல் வல்லுனர்கள் ஆராய்ந்து கூறியிருக்கின்றனர்.

எறும்புகளின் வாழ்க்கையில் நான்கு பருவங்கள் உள்ளன. அவை முட்டைப் பருவம், புழுப்பருவம், கூட்டுப் புழுப்பருவம், முழு வளர்ச்சியடைந்த எறும்பு என்பனவாம். எறும்பு முட்டைகளிலிருந்து ஆண் எறும்புகளும், இராணி எறும்புகளும், போர்வீர எறும்புகளும், வேலைக்கார எறும்புகளைத் தவிர்த்த மற்ற எறும்புகளுக்கு இறக்கைகள் உண்டு. தேனீக்களைப் போன்றே இராணிஎறும்பே,எறும்புக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்றன.

எறும்புகள் தங்கள் முட்டைகளைக் கண்ணும் கருத்துமாகக் காக்கும். புற்றில் அவற்றிற்கு எவ்விதத் தீங்கும் நேராதவாறு அடிப்பாகத்தில் வைத்துப் பாதுகாக்கும். மழையில் நனைந்தாலும் அவற்றை எடுத்து வெய்யிலில் உலர வைக்கும். குளிர் நாடுகளில் நாற்பது நாட்களும், வெப்ப நாடுகளில் பதினைந்து நாட்களும் தேவை முட்டை பொறிந்து புழுக்கள் வெளிவர. இப்புழுக்கள் தேன்போன்ற இனிய உணவை உண்ணும், பின் இப்புழுக்கள் தங்களைச் சுற்றிக் கூட்டை வளர்த்துக்கொண்டு கூட்டுப் புழுக்களாக மாறும். பின்னரே இவை முழு வளர்ச்சியடைந்து கூட்டைத் துளைத்துக் கொண்டு எறும்புகளாக வெளிவரும்.

எறும்புப்புற்றே எறும்பின் கோட்டையும், பண்டகசாலையும் ஆகும். புற்றமைக்கும் எறும்புகள் ஓயாமல் பாடுபட்டுக் களிமண்ணால் கோபுரம் போலப் புற்றைக் கட்டுகின்றன. அதனுள் அடுக்கடுக்காகப் பல பெரிய அறைகள் உள்ளன. இப்புற்றுகள் ஏறக்குறைய மூன்றடி உயரமும், பனிரெண்டடி குறுக்களவும் உடையன. ஆப்பிரிக்காவில் சில இடங்களில் மலைத் தொடர்களின் பக்கங்களில் பல ஏக்கர் பரப்புள்ள எறும்புப்புற்றுகள் உள்ளனவாம். சில புற்றுகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட அடுக்குகள் உள்ளனவாம். இத்தகைய புற்றுகளில் இருநூறு எறும்புக் கூட்டங்கள் வசிக்கமுடியும். ஒவ்வொரு கூட்டத்திலும் ஐயாயிரம் முதல் ஐந்து லட்சம் எறும்புகள் வரை இருக்கலாம்.

எறும்புகளுக்கும், அன்பு, நட்பு, பகைமை உணர்வுகள் அத்தனையும் உண்டு. நாம் ஒரு எறும்பைப் பிடித்து நீண்ட நாட்களுக்குப் பின்னர் விட்டுவிட்டாலும் மற்ற எறும்புகள் அதனை அடையாளங் கண்டுகொண்டு வரவேற்கும். வேற்றூர் எறும்புகளுடன் கடும் போர்புரியும். இரும்புக்கவசமணிந்த போர்வீரர்கள் போன்றவைகளும் அவற்றிடையே இருக்கும்.

வேலைக்கார எறும்புகள்தான் தன்னலம் கருதாது உழைக்கின்றன. இவை தமது கூட்டத்திற்கு வேண்டிய உணவைச் சேகரிக்கும், நெடுந் தொலைவினின்றும் உணவுப் பொருட்களை எடுத்து வரும், எறும்புகள் மோப்ப சக்தி மிகுந்தவை. சுவையான உணவுகளையே அவை பெரும்பாலும் நாடிச் செல்லும். எறும்புகள் இவ்வாறு சேமித்து வைத்த உணவைக் கரடிகள் புற்றில் கைவிட்டு எடுத்து உண்ணும் என சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. எறும்புகள் மிக்க நுண்ணறிவு உடையவை. மழை வருவது அவைகளுக்கு நன்கு தெரிந்து தங்கள் உடமைகளையும் முட்டைகளையும் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லும். அதனால்தான் "எறும்புகள் முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும்" என பெரியோர்கள் சொல்லுகிறார்கள் போலும்.

எறும்புகள் ஒருவகைப் பூச்சியைத் தம் புற்றில் வளர்க்கின்றன. அப்பூச்சி தேனைச் சேகரித்துத் தன் உடலில் வைத்துக்கொள்ளும், எறும்புகள் அவற்றிலிருந்து தேனைப் பருகும். இவற்றை எறுப்புகளின் பசுக்கள் என்பர் !

எறும்புகள் சேர்த்துவைத்த தானியங்கள் சில சமயம் மழை நீரால் முளைக்கத் தொடங்கிவிடும். இதனை ஆராய்ச்சியாளர்கள் எறும்புகள் பயிர் செய்கின்றன என்பர். இச்செடிகள் புற்றைப் பகைவரிடமிருந்து பாதுகாக்கின்றது.

எறும்புகள் மிகச் சிறியனவானாலும் ஆயிரக்கணக்கில் அவை ஒன்று சேர்ந்துவிட்டால் மக்களும் அவற்றைக் கண்டு அஞ்சுவார்கள். ஆப்பிரிக்காவில் "விரட்டும் எறும்புகள்" என்றொருவகை எறும்புகள் வாழ்கின்றன. இவை படையெடுத்து வந்தால் கிராமங்களில் உள்ள மக்கள் தங்கள் வீடு வாசல்களைவிட்டு ஓடி ஒளிவர். அவை அகன்ற பின்னர் திரும்புவர். இவை சிலந்தி, ஈ, கோழி, எலி, பன்றி முதலியவற்றையும் கொன்றுதின்றுவிடும். மிகப் பெரிய யானையின் துதிக்கையினுள் புகுந்து யானையையும் கொன்றுவிடும் சில சமயம். இவை நெருப்பில் புகுந்து அதை அணைக்கும். ஆற்றுவெள்ளத்திலும் துணிவுடன் புகுந்து அதன்மீது மிதந்து பெரிய பாலம் அமைத்து ஆற்றைக் கடக்கும். சில எறும்புகள் தங்கள் விஷத்தைப் பகைவர் உடலில் செலுத்தும். சில விஷவாயுவை வெளிப்படுத்தும்.

இவ்வளவு அரிய, பெரிய, செயல்களை ஆற்றும் எறும்புகளுக்கு உறுப்புகள் மிகக் குறைவே. தலை, மார்பு, வயிறு ஆகிய மூன்று பிரிவுகளே இருக்கின்றன. தலையின் முன்புறத்தில் சிறு விரல்போன்ற ஒருவகைக் கருவி உள்ளது. இது மிக நுட்பமான உணர்வுத்திறனையுடையது. இதன்மூலமாகவே எறும்புகள் பேசிக்கொள்ளுகின்றன. எறும்புகளின் தாடை மிக உறுதியாக இருப்பதால் நோய் கண்டவைகளையும், முட்டைகளையும், உணவுப்பொருட்களையும் தூக்கிச்செல்ல முடிகின்றது.

எறும்புகள் உழைப்பால் நமது கவனத்தைக் கவர்ந்தவை. எறும்புகள் கூட மனித குலத்திற்கு, சுறுசுறுப்பு சலியாத உழைப்பு முதலிய பாடங்களைப் போதிக்கக் கூடியவை.

**–பி. இராசேந்திரன்,**

கருத்தரங்கம் : 1.



# புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்

## இரா. இளஞ்சேரன்

கலை இலட்சியத்தின் பிரதிபலிப்பாகவே பிறந்தது; வளர்ந்தது; வாழ்கிறது. கலையும் இலட்சியமும் தொடர்பற்ற இரு வேறு துருவங்கள் என்ற தேவையில்லாத கருத்தைப் பரப்புவோர், சலனமற்ற உள்ளத்தின் பொழிப்புரையாக எழிற்கலைகளை மாற்ற முயற்சிக்கிறார்கள்.

கலை எப்போதுமே இலட்சியத்தின் வளர்ப்புப் பிள்ளையே தவிர, ஏதுமற்ற சொப்பனவஸ்தையின் உயிர்ப்பிண்டமல்ல. புனிதம் என்ற சல்லாத் துணியை அதிலே போர்த்துவதும் விரும்பத்தக்கதல்ல.

எம். ஜி. ஆர். இன்று இலட்சியத்தின் கலைஞர்களில் ஒருவராக—கலையின் பழுதற்ற இலட்சியமாக விளங்கும் பெருஞ் சிறப்பினைப் பெற்றிருக்கிறார்.

கலையுலக சிம்மாசனம் என்றுமே காலியாக இருந்ததில்லை. பழைய கதாநாயகர்கள் போவதும், புதியவர்கள் வருவதும் அந்த உலகத்தின் பிறவி இயல்பு.

நடிப்புச் செல்வர்கள், சங்கித விற்பன்னர்கள், குணசித்திர நட்சத்திரங்கள், அழகுத் தாரகைகள் ஆகிய எல்லோரும் அங்கே இசைபட வாழ்ந்து, பிறகு தேடுவாரற்று மறைந்திருக்கிறார்கள்.

நேற்று இருந்து சென்றோரை விட, இன்று இருப்போரில் எம். ஜி. ஆர். என்ற பெயரிலே தனி மகத்துவம் ஒளிவிடத்தான் செய்கிறது!

கலைஞன் கலைஞனாக வாழ்ந்து விடலாம். இலட்சியவாதியாக வாழ்வது அத்தனை எளிதல்ல. பிடிக்காத எதையும் 'பிரச்சாரம்' என்று புறக்கணிக்கும் மேதைகள் மலிந்த தமிழகத்தில், இலட்சியத்தோடு உறவாடும் எந்தக் கலைஞனும் எதிர்காலத்தைப் பலியாக்கிவிடவேண்டிய பரிதாப நிலைக்கு இழுத்து வரப்பட்டிருக்கிறான்!

எங்கேயாவது ஒரு இலட்சியவாதி தென்பட்டால், அத்தனை முட்டாள்களும் சேர்ந்துகொண்டு அவனை அவதிப்படுத்துவது இப்போதெல்லாம் சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. இயக்கத்தின் கலைஞர்களுக்கு மட்டுமே தேசிய இதழ்களால், பிற பிரச்சார சாதனங்களால் அதிக தொல்லைகள் கொடுக்கப்படுகின்றன.

எம். ஜி. ஆர். இதற்கு விதிவிலக்கல்ல. மாற்றாரின் பொல்லாத எண்ணங்கள் எப்போதோதேய்ந்து விட்டன. அவர் பெற்றிருக்கும் திரண்ட புகழுக்குக் களங்கம் கற்பிக்க முயற்சித்தோர் சிலர்கூட இன்று திராணியற்றுப் போய்விட்டார்கள்.

தமிழகத்தில் மட்டுமல்ல, தென்னகமெங்கும் மக்களின் இதயத்திலே சித்திரமாக வீற்றிருக்கும் பெரும்பேறு வெறும் 'சினிமா பிரபல'த்தால் விளைந்ததல்ல. கலைவாணருக்குப் பின் எந்தத் திரையுலக நட்சத்திரத்தின் பெயரையும் மக்கள் இத்தனை உள்ளநிறைவோடு நினைத்ததில்லை. இலட்சக்கணக்கானோருக்கு எம். ஜி. ஆர். என்ற திருப்பெயர் இனித்திருக்கிறது. இதனை ஏதோ 'கட்சி விவகாரம்' என்று விலக்குவதும் பேதமை.

வீரர்களை ஆராதிக்கும் வழக்கம் மனிதகுலத்தின் பரம்பரைப் பண்பு. தமிழகத்திலே இந்தத் தன்மை புறப்பாட்டாக - களத்திலே விளையாடும் வீரர்களின் செருக்கு மிக்க காதைகளாக மலர்ந்திருக்கிறது.

வரலாற்றிலே வந்துபோகும் வீர உள்ளங்களை மக்கள் எப்போதுமே வழிபடுகிறார்கள். அடிமைச் சக்தியிலே சிக்கித் தவிப்போருக்கு அஞ்சாநெஞ்சினரின் கதைகள் நிறைந்த ஆறுதலைத் தந்திருக்கின்றன.

எம். ஜி. ஆரின் திரையுலகப் பிரவேசம் சரித்திரகாலக் கதாநாயகர்களின் தேவையைப் பேசும் படங்களிலே பெரும் அளவு நிறைவு செய்தது.

'பளிச்சிடும் விழிகளும், பார்வையின் கம்பீரமும்' பழைய வீரர்களின் ராஜரீகத் தோற்றத்தை அப்படியே சித்தரித்தன. கொடுமையை எதிர்த்துக் குமுறும் கதாபாத்திரமாக அவர் திரையிலே தென்பட்டபோது, ஆரவாரம் தானாகவே எழுந்தது. தங்களது எழுச்சியை எம். ஜி. ஆரின் நடிப்பிலே அவர்கள் தரிசித்தார்கள். வேறு எந்த நடிகருக்கும் இது போன்ற பாத்திரங்கள் இத்தனை இயற்கையாகப் பொருந்தியதுமில்லை. மக்களின் உணர்ச்சியிலே இழையோடும் வீராராதனைக்கு புதியதோர் பொலிவினை எம். ஜி. ஆரின் திரையுலகச் சாதனைகள் படைத்துக்காட்டின. புரட்சி செய்யும் வீரனின் தோற்றத்திலே அவர் ஆயிரமாயிரம் நெஞ்சங்களைக் கவர்ந்திருக்கிறார். மக்கள் அவருக்கு 'புரட்சி நடிகர்' என்ற பெருமையினைப் பூரிப்போடு வழங்கியிருக்கிறார்கள்.

தரம் குறையாத நடிப்பில் எம். ஜி. ஆர். சோடை போனதேயில்லை. இன்று நேற்று அல்ல, 'சின்னப்பாவும், பாகவதரும்' இணையற்ற திரைவேந்தர்களாகக் காட்சியளித்த அந்த நாளிலேகூட, சில சில்லரைப் பாத்திரங்களில் வந்துபோன எம். ஜி. ஆரிடம், நடிப்பின் தனித்தன்மை பளிச்சிடத்தான் செய்தது. இன்று வளர்ந்திருக்கும் அவை எம். ஜி. ஆருக்கே உரித்தான அழகிய முத்திரைகள்!

பொது இடங்களிலே வந்தால் நட்சத்திர மினுமினுப்பு மங்கிவிடுமே, என்ற பழைய நியதியை அழித்தோரில் எம். ஜி. ஆர். பிரபலமானவர்.

இப்போதைய தாரகைகள் விண்ணிலே பளிச்சிடாமல் மண்ணிலே ஒளி விடுவதற்கு எம். ஜி. ஆரின் பொது வாழ்வு- மக்களோடு நெருங்கிப் பழகும் அவர் தொண்டுள்ளம் பெரும் பங்கு வகிக்கிறது.

எம். ஜி. ஆரின் இயற்கையான வழங்கும் மனப்பான்மை இன்று எண்ணற்ற நடிகர்களைக் கொடை வள்ளல்களாக்கிய விசித்திரத்தை நாடு அறியும்.

பிறர் செய்யாததைச் செய்தோரே பெருமக்கள் எனப்படுவர். எம். ஜி. ஆர். இத்தகு அற்புத மனிதர்! 'பொன்னும் பொருளும்' புதியோர் உறவும் இன்னும் வேண்டும் என்ற தாகத்தை எழுப்புவதுதான் கலையுலக இயல்பு.

விசித்திரமான அந்த வையம் கொள்கை வாதிகளை தலைகுப்புறக் கவிழ்த்திருக்கிறது. நேற்றைய நினைப்பை விட்டெறிந்துவிட்டு, இன்றைய இனிப்பிலே விழி மூடியிருப்போர் அங்கே மிகப் பலர்! விதவிதமாக வண்ணம் மாறுவோர் நிறைந்த அந்த விசித்திர வெளிச்ச புரியிலே கொள்கை தவறாத ஒரு நல்ல உள்ளம் இருப்பது அபூர்வம்! அந்த அதிசயத்தையே நாடு இன்று எம். ஜி. ஆரின் வடிவிலே பார்க்கிறது!

அண்ணா சொன்னார்: 'நமது தம்பிமார்கள் கொள்கையிலே சிறிது விட்டுக் கொடுத்தாலே போதும்; ஒரு மலர்த் தோட்டமே அவர்கள் பின்னால் வரும்.'

எம். ஜி. ஆர். கொள்கையின் சின்னஞ்சிறு இழையை விட்டுக் கொடுத்தாலே போதும், இன்று தூற்றித் திரியும் திருவாளர்கள் அத்தனை பேரும் அவருக்குப் பல்லாண்டு பாடுவார்கள்! எல்லாருக்கும் நல்ல பிள்ளையாக வாழ்ந்திருப்பார், அவரும்!

ஆயிரங்களுக்காக இலட்சியங்களைத் துறந்தோரின் மத்தியிலே, இலட்சியங்களுக்காக ஆயிரங்களைத் துறந்தோர் என்றுமே வாழ்த்தப்படுவார்கள்.

'ஓயா துண்டு படுத்துறங்கி உணர்ந்து விழித்து கதை பேசி' வாழ்வோருக்கு இலட்சியம், கோட்பாடு, சிந்தனைத் தெளிவு போன்ற இருபதாம் நூற்றாண்டைய மனிதனின் முதல் தேவைகள் அனைத்தும் சந்தைப் பொருள்களாகத் தென்படுவதில் அதிசயமல்ல.

அந்த நாளில், பிரான்ஸ் நாட்டிலே எத்தனையோ நாடகப் புலவர்கள், உரத்த குரல் கொண்ட உயர்ந்த நடிகர்கள் வாழத்தான் செய்தார்கள்; ஆனால் மோலியரின் திருப் பெயரைமட்டுமே சரித்திரம் இன்று வடித்து வைத்திருக்கிறது.

— 8ம் பக்கம் —

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் பற்றிய, தோழர் இரா. இளஞ்சேரனின் கருத்துகள் இவை.

தொடர்ந்து, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி ஆகியோர் பற்றிய கட்டுரைகள் வெளியிடப்படும். கட்டுரைகளை வாசகர்கள் எழுதலாம். பிரசுரிக்கப்படும் கட்டுரை ஒன்றுக்கு ரூ. 5 பரிசு வழங்கப்படும்.

[ஆ-ர்.]

# ★ 'சிவகெங்கைச் சீமை'--துவக்க விழா ★

**'அறம்வளர்த்த தமிழ்வாழ்க!
அன்னைவாழ்க!
அவனிபுகழ் திராவிடரின்
வீரம் வாழ்க!
மறவர்சிவ கெங்கைவளர்
மாண்பு வாழ்க!
மருதரசர் திருப்பெயரை
வணங்குகின்றோம்'**

எனும் பாடலுடன் கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் **'சிவகெங்கைச் சீமை'** படப் பிடிப்பு ஆரம்ப விழா, 24-8-58 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில், சென்னை பரணி ஸ்டுடியோவில் தொடங்கியது.

வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து வீரப் போர் புரிந்த மருதுபாண்டியர் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள கதை 'சிவகெங்கைச் சீமை'

வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசிய தயாரிப்பாளர் கண்ணதாசன், சரித்திரச் சம்பவங்களோடு கற்பனைப் பாத்திரங்கள் இணைக்கப்படும்போது அதன்மூலம் முழுத் தன்மை பெறும் கதையமைப்புப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, அறிஞர் அண்ணா அவர்களைவிழாவுக்குத் தலைமை தாங்கி நடத்தித் தரக் கேட்டுக்கொண்டார்.

**அறிஞர் அண்ணா** அவர்கள் தலைமைவகித்துப் பேசுகையில், 'சிவகெங்கைச் சீமை' சிறப்புறத் தயாரிக்கப்படும் என்பதில் நம்பிக்கை தெரிவித்ததுடன், படம் தமிழர்களுக்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பின்னர், தமிழரசுக் கழகத் தலைவர் ம. **பொ. சிவஞானம்** அவர்கள் படப் பிடிப்பைத் தொடங்கி வைக்கும் முறையில், 'சிவகெங்கைச் சீமை' என்று எழுதப்பட்டிருந்த போர்டுக்கு மேலிருந்த திரையை நீக்கி வைத்தார். அவர், இந்தியத் துணைக்கண்ட விடுதலைப் போரைத் தவக்கிவைத்தமாவீரர்களான மருது பாண்டியர் வரலாறு, திரைப் படமாக உருவாக்கப்படுவதில் தாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதாகவும், இத்தகைய அரும்பணியில் ஈடுபட்டுள்ள கண்ணதாசனைப் பாராட்டியும் பேசினர்.

அடுத்து, ரேஷனல் பிக்சர்ஸ் **அதிபர் பி. ஏ, பெருமாள்** அவர்கள் காமிராவை முடுக்கி வைத்தார்.



கண்ணதாசன் வரவேற்கிறர்.

தொடர்ந்து, தோழர்கள் **சின்ன-அண்ணாமலை, மு. கருணாநிதி** ஆகியோர் தங்களுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துப் பேசினர்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் முடிவுரையாகப் பேசும்போது, படத் துவக்க விழாவில் தாமும், ம. பொ. சியும் கலந்துகொள்வதே குறிப்பிடத்தக்கது என்றும், சரித்திரப் படங்கள் எடுக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும், அவற்றின் மூலம் நாட்டு மக்களுக்குக் கிடைக்கப் பெறும் பயன்கள் குறித்தும் குறிப்பிட்டார்.

'பண்டைக் காலச் சரித்திரக் கதையைப் படமெடுப்பதில் கற்பனைக்கு நிறைய வாய்ப்பு உண்டு. ஆயினும் தமிழனுக்குப் பெருமை தரும் வகையில் சரித்திரச் சம்பவங்களைச் சித்தரிக்க வேண்டும். ஆராய்ச்சி நூல்களை நன்கு படித்து ஒப்பனைகளை நிறைவேற்ற வேண்டும். அறிவாற்றல் நிறைந்த கண்ணதாசன் தயாரிக்கும் இப்படம், நல்ல முறையில் வளர்ச்சி பெற்றுத் தமிழகத்துக்குப் பெருமையளிக்கும்' என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.




அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றுகிறர்கள்.

இறுதியாக, கண்ணதாசன் வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினர்.

படத்தில் நடிக்கும் நடிகர்கள், டெக்னீஷியன்கள் ஆகியோரின் முழு ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்றால், படம் விரைவில் திரையிடப்படும் என்றும், அறிஞர் அண்ணா அவர்களும் பிறரும் குறிப்பிட்டபடி தமிழ்ப் பண்புக்குக் கொஞ்சமும் இழுக்கு நேராவண்ணம் படம் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுவிட்டு, படத்தில் பணியாற்றும் டைரக்டர், கேமிரா நிபுணர், இசையமைப்பாளர்கள், ஆர்ட் டைரக்டர் ஆகியோரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

பின்னர் விழா இனிது முடிந்தது.

'சிவகெங்கைச் சீமை' யில் இலட்சிய நடிகர் **எஸ். எஸ். இராசேந்திரன், டி. கே. பகவதி, எம். கே. முஸ்தபா, எஸ். வரலட்சுமி, எம். என். ராஜம், கமலா-லட்சுமணன்** மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

ஏ. வி. எம். புகழ் **கே. சங்கர்** படத்தை டைரக்ட் செய்வார்.

பிரபல ஜெமினி **தம்பு** கேமிராவைக் கையாளுவார்.

புகழ் பெற்ற இசையமைப்பாளர்கள் **விசுவநாதன்-ராமமூர்த்தி** படத்திற்கான இசையமைப்பாளர்களாகப் பணியாற்றுவார்கள்.

**ஏ. பாலு** ஆர்ட் டைரக்டர்.

கதை, வசனம், பாடல்கள் அனைத்தும் **கண்ணதாசனுடையவை**.

விழாவில் சிவாஜி கணேசன், எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, சந்திரபாபு, டி. பாலசுப்ரமணியம், எம். என். ராஜம், பி. எஸ். ஞானம் மற்றும் ஏராளமான நடிகர்களும், ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் ஏ. எல். சீனிவாசன், கிருஷ்ணா பிக்சர்ஸ் லேனா, சரஸ்வதி பிக்சர்ஸ் ஏ. சி. பிள்ளை, பத்மினி பிக்சர்ஸ் பி. ஆர். பந்துலு முதலிய பிரபல படத் தயாரிப்பாளர்களும், மினூமூவிஸ் அதிபர் சோமசுந்தரம் செட்டியார் மற்றும் பல பட வினியோகஸ்தர்களும், படத்துறையில் பணியாற்றும் வேறு பலரும் கலந்து கொண்டார்கள். ★




### 3

அவள் பளிச்சென்று ஒரு அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

"அவர்களை வரச்சொல்" என்றான், சிங்கத்தேவன்.

வேலைக்காரி வெளியேறினாள்.

வீரத்தேவனும், பொம்மையாவும் உள்ளே நுழைந்தார்கள். சிங்கத்தேவன் எழுந்து அவர்களை அரவணைத்துக் கொண்டான். உடல்கள் பிணைந்தன... சிங்கத்தேவன் உள்ளம் மட்டும் எங்கேயோ கிடந்தது.

எனினும், "எப்படி ஓட்டம் கூட்டம்?" என்று கேட்டான்.

"அற்புதம்! அற்புதம்! பெரும்பாலும் எல்லோருமே வந்திருந்தார்கள்..." என்றான் வீரத்தேவன்.

"உங்களைத்தவிர!" என்று அதை முடித்தான் பொம்மையா!

சிங்கத்தேவன் சிரித்தான். எல்லோரும் அமர்ந்தார்கள்.

"எனக்கு இங்கே வேலை சரியாக இருந்தது. ஒரு வழியாக சிறைச்சாலைக்குள் புகுந்து ஊமைத்துரை நாயக்கரிடம் முடிவைச் சொல்லிவிட்டு வந்தேன்..."

-"அப்படியா! சிப்பாய்கள்...? வீரத்தேவன்.

-"ஏமாற்றிவிட்டேன்... ஆனால் பாவம்! இதில் ஒரு பெண் அகப்பட்டுக்கொண்டாள்" என்றான் சிங்கத்தேவன், பொம்மையாவைப் பார்த்தபடி.

"யார் அது?"-வீரத்தேவன்.

"ஏழாயிரம் பண்ணை ரங்கைய நாயக்கரின் மகள் சுப்பம்மா!"

-பொம்மையா திகைத்தான். "சுப்பம்மாவா! அவள் எப்படி இங்கே வந்தாள்!" பதைப் போடு கேட்டான்.

நடந்ததைச் சொன்னான் சிங்கத்தேவன். பொம்மையாவின் கண்கள் கலங்கின.

"அடிப்பாவி!... சரி... இப்போது அவளை எங்கே வைத்திருப்பார்கள்?" என்று கேட்டான்.

"சிறைச்சாலைக்குத்தான் கொண்டு சென்றிருப்பார்கள்"-சிங்கத்தேவன்.

"நான் அவளைப் பார்க்க வேண்டும்!" எழுந்தான் பொம்மையா.

"அவசரப்படாதே! நாம்எல்லோருமே முயற்சிப்போம். முயற்சி பலிக்கவில்லை என்றாலும் சிறை உடைப்புக்கு இன்னும் அதிக நாட்கள் இல்லை!" என்றான் வீரத்தேவன்.

அறைக்குள் இருந்த சிங்கத்தேவன் மனைவி, ஒரு கதவைச் சிறிது திறந்துவைத்துக்கொண்டு இவற்றைக் கவனித்தாள்.

"ஏதாவது சாப்பிடுகிறீர்களா?"—சிங்கத்தேவன் ஒப்புக்காவது அவர்களை உபசரிக்க விரும்பினான்.

களங்கமற்ற வீரத்தேவன், "ஓ! பானகம் கிடைத்தால் நலம். பலகாரம் இருந்தாலும் தேவைதான்!" என்றான், சிரித்தபடி.

சிங்கத்தேவன் மனைவியின் கண்கள் கலங்கின.

"கண்ணா..." என்று தவறிக் கூப்பிட ஆரம்பித்த சிங்கத்தேவன், பளிச்சென்று மாற்றியபடி, "கண்ணப்பா! கண்ணப்பா!" என்றான். அவன் முகம் ஒருமுறை கறுத்துவெளுத்தது.

பொம்மையாவும் வீரத்தேவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"கண்ணப்பன் எங்கள் வேலையாள். எங்கேயோ போய்விட்டான் போலிருக்கிறது..." என்று இழுத்த சிங்கத்தேவன் வேலைக்காரியை அழைத்து, பானகமும் பலகாரமும் கொண்டு வரச் சொன்னான்.

அறைக்குள் விம்மிக்கொண்டிருந்த சிங்கத்தேவன் மனைவி உட்பக்கத்துக் கதவு வழியாகப் பின்புறம் சென்று, அடுப்பங்கரைக்குள் நுழைந்தாள்.

சிறிது நேரத்தில் பலகாரமும் பானகமும் வந்தன. பல் துலக்க எண்ணிய வீரத்தேவன் தண்ணீர்ப் பானைகள் வைக்கப்பட்டிருந்த இடத்தை நோக்கி நடந்தான். அது, அடுப்பறையின் சன்னல் அருகே இருந்தது. சிங்கத்தேவனும் உடன் சென்றான். பளிச்சென்று சன்னல் கதவு சாத்தப் பெற்றதை வீரத்தேவன் கண்டான்.

எந்த பிதச் சலனமும் இன்றி, பல் துலக்கினான்.

பலகாரம் சாப்பிட வந்து அமர்ந்தான்.

பொம்மையா, அங்கேயே சிலை போல் அமர்ந்திருந்தான். சுப்பம்மாளின் நிலையை எண்ணிஅவன் கலங்கிக்கொண்டிருந்தான்.

"ஏய்! நீ பல்துலக்கவில்லை?" என்று கேட்டான், வீரத்தேவன்.

சிங்கத்தேவன் சிரித்தபடி, "இவனுக்காக சிறைச்சாலையில் சுப்பம்மா பல் துலக்கி இருப்பாள்" என்றான்.

பொம்மையாவுக்குக் கோபம் வந்தது.

"உனக்குக் கேலியாக இருக்கிறதா?" என்றான்.

வீரத்தேவன் அவன் தோளில் தட்டி, "ஏய்! ஏன் கோபப்படுகிறாய்? உன் காதலிக்கு எதுவும் நேராது.

---

அடுத்த இதழில்

பாரதியார் பற்றி

கண்ணதாசன் எழுதும்

★ கவிதை

★ கட்டுரை

இவை வரும்!

இன்னும் சில நாட்கள்தான். வீரனுகச் சிறையை உடைத்து, உன் காதலியைக் குதிரைமேல் தூக்கி வைத்துக் கொண்டு, எங்கேயாவது தாமிரபரணிக் கரைப் பக்கம் போய், காதல் பாட்டுப்பாடு! இதற்கெல்லாம் கலங்கிவிடலாமா? என்னைப் பார். என் தங்கை காணுமல் போய் மாதக்கணக்கில் ஆய் விட்டது. கடத்திச்சென்ற கயவனைக் கண்டுபிடிக்கக்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவனைக் கண்டுபிடிக்கும்போது துண்டு துண்டாக அறுத்துப் போடுவேன்.....அதுவரை பதறி என்ன பயன் தம்பி! சமயம் வரும்! தைரியமாக இரு!'' என்ருன்.

சிங்கத்தேவன் முகம் களை இழந்தது. ஆனுலும் அவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

வீரத்தேவன் பலகாரத்தைச் சாப்பிடத் துவங்கினுன். ஒரு வாய் உண்டதும் அவன் கண்கள் கலங்கின! அடுத்த பலகாரத்தை எடுக்கச் சென்ற கை, அப்படியே நின்றது.

"ஏன், என்னப்பா?" என்று கேட்டான், பொம்மையா.

சிங்கத்தேவன் ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

''இல்லை...என் தங்கை கண்ணுத்தாள் இதே மாதிரிதான் எனக்குச் செய்து தருவாள். அவள் செய்ததுபோலவே இருக்கிறது!''-என்ருன் வீரத்தேவன்.

சிங்கத்தேவன் உயிர் அவனிடத்தில் இல்லை. தலையில் ரத்தம் கட்டுவது போன்ற ஒரு உணர்ச்சி.

உள்ளறையிலிருந்த அவன் மனைவி, வீரத்தேவனின் வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, குப்புறப் படுத்துக்கொண்டு விம்மினுள்.

கண்களைத் துடைத்துக் கொண்ட வீரத்தேவன் பலகாரங்களை ஒரு வழியாகச் சாப்பிட்டு முடித்தான். பேச்சை, வேறு திசைக்கு மாற்ற முயன்ருன், சிங்கத்தேவன்.

''நீங்களெல்லாம் என்ன வேஷம் போட்டுக்கொண்டு சிறையுடைப்புக்கு வரப்போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

வீரத்தேவன், தான் காவடி தூக்கிக்கொண்டு வரப்போவதாகச் சொன்னுன். உடனே பொம்மையா, ''அதற்குள் நான் ஒரு வேடம் போடப்போகிறேன். என் அத்தை மகன் ஒருவன் சிறைச்சாலைக் காவலனுக இருக்கிருன். இன்றிரவு அவனைச் சந்தித்து, அவன் உடைகளை வாங்கிக்கொண்டு நாளைக்கு காவல்காரனைப்போலப் போய் சுப்பம்மாவைச் சந்திக்கப் போகிறேன்'' என்ருன்.

''அதற்குள் ஏண்டா அவசரம்?''-இது வீரத்தேவன்.

''ஏய்! நானும் சிப்பாய்வேஷத்தில்தான் சென்றேன். அது ஆபத்தில் முடிய இருந்தது. இப்போது ஒவ்வொரு சிப்பாயையும் சோதிக்கிருர்களாம்! எச்சரிக்கை!'' என்ருன், சிங்கத்தேவன்.

''எதற்கும் நான் முயற்சிக்கிறேன். அகப்பட்டுக்கொண்டால், என்னையும் சேர்த்து தை இருபதில் விடுவியுங்கள்!'' என்று கூறியபடி பொம்மையா எழுந்தான்.

''ஏன், நாங்களும் வந்து அகப்பட்டுக்கொள்ளுகிருேம். மிச்சமிருப்பவர்கள், அந்தவேலையைச் செய்யட்டும்!'' என்ருன், வீரத்தேவன் கேலியாக!

அவர்கள் என்ன கூறியும் பொம்மையா தன் முடிவை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை.

அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, அவன் வெளியேறினுன். அவனுடைய காதல் வீரத்தை வியந்து வீரத்தேவனும் சிங்கத்தேவனும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில்வீரத்தேவன், தானும் புறப்பட முயன்ருன். மற்றும் சிலரை, திருநெல்வேலியில் சந்திக்க வேண்டியிருப்பதைக் கூறி, வெளியேற, படிக்கட்டில் கால் வைத்தான்.

திடீரென்று ''அண்ணு!'' என்ெருரு அலறல் கேட்டது.

திடுக்கிட்டு நின்ருன் வீரத்தேவன்; சுற்றுமுற்றும் பார்த்தான்.

சிங்கத்தேவன் உடம்பு படபட வென்று ஆடிற்று. போருக்குத் தயாராகிறவன்போல் தன்னைத் தேற்ற முயன்ருன்.

4

## சிறையிலோர் காமுகன்

சிறையில் அடைக்கப்பட்ட சுப்பம்மா கலங்கவில்லை. உற்சாகமாகவே இருந்தாள். ஊமைத்துரை எங்கிருக்கிருர் என்பதைப்பார்த்துவிடப் பேராசைப் பட்டாள். ஆனுல், அவள் அடைக்கப்பட்டிருந்த அறைக்கும், ஊமைத்துரை வைக்கப்பட்டிருந்த இடத்திற்கும் வெகுதூரமிருந்தது. அவளது அறையை அடுத்திருந்த அறைகளில் பெண்களே அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில், கன்னிப்பெண்கள் முதல் கிழவிகள் வரை பலரும் இருந்தனர். கன்னிப்பெண்களை வட்டமிடுவது அங்கே சாதாரணம். யாரும் எதுவும் கேட்க முடியாத இடம் சிறைச்சாலை அல்லவா!

சிறைக்காவலர்களிலே ஒரு காமுகன் சுப்பம்மா வந்ததிலிருந்து கழுகுபோல் வட்டமிடத் தொடங்கினுன். ஆள் நல்ல உயரம். பருத்த தோள்கள். அகன்ற மார்பு. வயது நாற்பது இருக்கும். சுப்பம்மா, அவனைக்கண்டுதான் பயந்தாள். அவன், அவளிருக்கும் அறைக்குப் பக்கத்திலேயே உலாவினுன். அடிக்கடி அவளைப் பார்த்துச் சிரித்தான். உணவு கொடுக்கும் நேரங்களில் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று உணவைக் கொடுப்பதுபோல் அவளைத் தொட முயற்சித்தான். இதனுல், சுப்பம்மா, இரவுநேரத்தில்கூடத்

**படிக்கத் தவருதீர்கள்!**


20-9-58 இதழில்

நடிகர்

**சிவாஜி கணேசன்** பற்றி

ஆசிரியர் கண்ணதாசன்

எழுதுகிருர்!



# வெண்பாப் போட்டி-26.

ஈற்றடி :

பூசிப்பதுஞ் சுத்தப் பொய்.

முடிவு தேதி 20-9-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

தூங்கக்கூடாது என்று முடிவு கொண்டாள். பக்கத்து அறைகளில் இருப்போரைப் பார்க்க முடியாவிட்டாலும், சத்தம் போட்டுப் பேசி, அவர்களிடமிருந்து அவனைப்பற்றித் தெரிந்து கொண்டாள். அவன் அவளைப் பார்த்துச் சிரிக்கும்போது "குரங்கு சிரிக்கிறது! குரங்கு சிரிக்கிறது!" என்று சத்தம போடுவாள். பக்கத்து அறைப் பெண்கள் கைதட்டிக் கும்மியடித்து அவனைப் பழிப்பார்கள். இதை எல்லாம் கவனித்த அந்தக் காமுகன், எப்படியும் சுப்பம்மாளைக் கெடுப்பது என்ற முடிவு கொண்டான்.

அன்றிரவு. நடுச் சாமத்தில் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான் அவன். சுப்பம்மா தூங்கவில்லை. அவனைக் கண்டதும், 'ஓ'வென்று அலறினாள். அவன் அவள் வாயைப் பொத்தினான். அவள் திமிறினாள். பலவந்தமாக அவளைக் கெடுக்க முயன்றான், அவன். சுப்பம்மா, தன் பலங்கொண்ட மட்டும் போராடி, அவன் கையைக் கடித்தாள். அவள் வாயை அடைத்திருந்த அவன் கை, விடுபட்டது. சுப்பம்மா அலறினாள். உடனே பக்கத்து அறையிலிருந்த பெண்கள் எல்லோரும் 'ஓ'வென்று அலறினார்கள். சிறை முழுவதும் ஒரே சத்தம். திகைத்துப்போன அந்த முரடன், அவளை விட்டுவிட்டு, "பார்! உன்னை எப்படியும் அடைந்து காட்டுகிறேன்!" என்று சபதம் செய்துவிட்டு வெளியேறினான்.

சிறையில் சத்தம் அடங்கிற்று.

அதிகாலைநேரம். பொழுது சரியாக விடியவில்லை.

சுப்பம்மா இரவு முழுதும் தூங்கவில்லை. எப்படியும் அந்த முரடன் வருவான் என்ற எண்ணத்தில், சிறையின் உட்புறத்தில் கற்களைப் பிணைத்திருந்த இரும்புச் சங்கிலி ஒன்றை வெகு தொல்லைப்பட்டுக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

காலடி ஓசை கேட்டது. சுப்பம்மா தயாரானாள். கதவு திறக்கப்பட்டது. ஒரு சிப்பாய் உருவம் பளிச்சென்று உள்ளே புகுந்து கதவைச் சாத்திற்று. ஒருகணமும் தாமதிக்காமல் சுப்பம்மா, தன் கையிலிருந்த சங்கிலியை ஓங்கி அவன் தலையில் அடித்தாள். ரத்தம் பீறிட்டது. அவன் "சுப்பம்மா!" என்று அலறிக் கொண்டே விழுந்தான்.

சுப்பம்மா திகைத்தாள்.

கீழே விழுந்த அந்த உருவத்தைப் புரட்டிப் பார்த்தாள்.

பொம்மையா! அவளை மணமுடிக்க வேண்டியவன்! அவன் செத்துவிட்டானே?

காவலர்கள் வரும் ஓசை கேட்டது.

அவள் நடுங்கினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள்.

தொடரும்

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

இத்தனைக்கும் அவன் சீமானல்ல. அக்தப்புரத்தின் புன்சிரிப்பைப் பரிசாகப் பெற்றவனுமல்ல. 'கூத்தடிக்கும் கோமாளி' என்று, பால் குடித்துக் கொழுப்பேறிய பிரபுக்கள் மோலியரை இகழ்ந்து புறக்கணித்தார்கள்!

அவனது உணர்ச்சியிலே, உள்ளத்திலே, சொல்லிலே இலட்சிய வெறி எல்லை மீறி பரிமளித்தது! மதவாதிகளின் கெட்ட கனவாக, மேட்டுக்குடியினரின் தீராத தலைவலியாக மோலியர் வாழ்ந்தான்! அவர்களது ஆர்ப்பரிப்பும், ஆவேசமும் அவனை நெருப்புக் குண்டம் வரை இழுத்து வந்து வேடிக்கை பார்த்தது.

கலையை போர் முரசமாக்கிய புரட்சியாளர்களின் பரம்பரையிலே மோலியர் முதல்வன். அந்த நாட்டு வரலாற்று ஏடுகள் அவனது பெருமிதமான திருவாழ்வை சித்தரிக்கின்றன.

வெறும் கைதட்டலும், விழாக் கோலமும் இன்றைய தேவையை நிறைவேற்றுமே தவிர, காலத்தை வென்று கலைஞனின் புகழ் வாழ சமுதாயத்தின் ஆசாபாசங்களிலே அவன் தன்னையே புதைத்துக் கொள்ள வேண்டும்.

வரு நாளைய சந்ததி விழிப்படைந்திருக்கிறது. எதையுமே 'கடை விரித்து' விலையாக்கிவிடலாம்என்ற பற்ருக்குறைத் தத்துவம் எப்போதோ அழிந்துவிட்டது.

கருத்து, கலையின் உயிர்நிலை. இலட்சியங்கள் வான வெளியில் சிறகடித்த காலம் போய், இன்று மனித சமுதாயத்திடம் உறவாடத் துவங்கிவிட்டன.

'கலைஞன் தனிப் பிறவி; வெறும் பொழுதுபோக்கு சிருஷ்டி' என்ற சென்ற நூற்றுண்டின் எண்ணம் இன்று உலகத்தின் எந்தப் பகுதியிலும் இல்லை.

கலை வல்லோன் கருத்தின் முதல்வனாக-மனித குலத்தின் குணச்சித்திர பேராசிரியனாக-சமுதாயத்தின் பாதுகாவலனாக- தாயகத்தின் கண்ணின்மணியாக வாழ வேண்டிய பிணைப்புகள் இன்று உருப் பெற்றிருக்கின்றன.

இந்த சித்தாந்தத்தின் பழுதற்ற அத்தாட்சியாக இப்போதைய புதிய தலைமுறையினருக்கு எம். ஜி. ஆர், தென்படுகிறார்.

பேசிய இலட்சியங்கள் அனைத்தையும் பசுமை கண்டதும் விழுங்கிவிடும் விசித்திர உள்ளங்கள்வாழும் கலையுலகிலே, கொண்ட கொள்கைகளுக்காக வாழும் எம். ஜி. ஆரின் சிறப்பு தெரிகிறது.

நாட்டிலே எத்தனையோ நடிகர்கள், நடிப்புக் கலையின் பல்வேறு இயல்புகளில் புகழ் மிக்கோர் இருந்தாலும், தனித்த செல்வாக்கு பிறருக்கு இல்லாத ஜொலிப்பினை எம். ஜி. ஆர். பெற்றிருக்கிறார்.

அது வெறும் சினிமா 'ஜொலிப்பு' அல்ல. கருத்தின் ஜொலிப்பு; லட்சியத்தின் ஜொலிப்பு; பிறந்த மண்ணிற்குப் பணிபுரிவோர் மட்டுமே பெறும் ஜொலிப்பு!

எம். ஜி. ஆர். இன்று தனி மனிதரல்ல. ஒரு சமுதாயத்தின் மிகப் பெரிய ஆறுதல். வீழ்ச்சியுற்றோர் படைத்திட்ட பாசறையின் கலைச் செல்வம். கலைவாணருக்குப்பின் இயக்கம் கண்டெடுத்த சாதிப் பவளம்!

அந்த புகழின் செல்வர், கலை உலகத்தின் தலை மகன். இலட்சியத்தோடு இலட்சியமாக இழைந்துவிட்ட கொள்கை வாதி. அண்ணாவின் அன்பிற்குப் பாத்திரமானவர். இயக்கத்தின் மூத்த பிள்ளைகளிலே ஒருவர்!

வருங்கால சரித்திரம் எம். ஜி ஆர். எனும் தலைப்பின்கீழ் இந்த சேதிகளைத்தான் சுமந்து நிற்கப் போகிறது!

★

## அறிவிப்பு

சில எதிர்பாராத காரணங்களை முன்னிட்டு செப்டம்பர் மாத "முல்லை" இதழ் வெளிவராது என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அடுத்த "முல்லை" வெளிவரும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

நிர்வாகி,
"முல்லை"

## வேண்டுகோள்

**கலை அன்பர்களே !**
**கலாபிமானிகளே !!**

தென்னகத்து திரைவானில் சுடர்விட்டு பிரகாசிக்கும் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கு வருகிற அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் மதுரையில் தங்க வீரவாள் பரிசளிக்கப் போவதை முன்னிட்டு கலாபிமானிகள், எம். ஜி. ஆர். மன்றங்கள், மற்றும் அனைவரும் தங்களால் இயன்ற பொருள் உதவியை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
க. துரை அரசு,
எஸ். மூத்து,
எம். ஜி. ஆர். பரிசளிப்பு விழாக் கமிட்டி.

பணம் அனுப்பவேண்டிய இடம் :
க. துரை அரசு,
7, வெங்கலகடைத் தெரு,
மதுரை.

**விரைவில் வருகிறது !**

புதிய நடை !
சுவையான கதை !
மறுமலர்ச்சிக் கருத்துக்கள் !
அழகான பதிப்பு !

★ காதல் கதை ★

ப. புகழேந்தி எழுதியது
விலை ரூ. 1-0-0

விபரங்களுக்கு :—

இளங்கோ பதிப்பகம்,
14, உஸ்மான் ரோடு, தியாகராயநகர்,
சென்னை-17.

# திராவிடம் தமிழின் திரிபே!

இற்றைய தமிழக மக்கள் அனைவருளத்தும்; ஒரு 'தொடர்' ஒலித்துக்கொண்டிருப்பதைக் காணலாம். அத்தொடர், 'திராவிடம்'' என்பதாகும்.

'திராவிடம்' என்ற சொல்; தமிழ்ச் சொல்லா? அல்லது வடமொழிச் சொல்லா? என்ற குழப்பமும் இல்லாமலில்லை. ஒரு சாரார் வடசொல்லென்று வாதிக்கின்றனர். இன்னொரு சாரார் 'தமிழ்ச் சொல்லே' என்று எதிர்வாதமிடுகின்றனர்.

'திராவிடம்' என்பதை வடசொல் என்பவர்கள் அதற்குரிய சான்றுகளை எடுத்துக்காட்டுகின்றனர். 'பழந்தமிழ் இலக்கிய – இலக்கணங்களில் இச்சொல் வழக்கிலில்லை. மேலை நாட்டு மொழித்துறை வல்லுநர்களும், வரலாற்ருய்வாளர்களும், இச்சொல் வடசொல்லென்றுகொண்டே தம்தம் ஆராய்ச்சிகளை எழுதியுள்ளனர்? என்று மக்களின் முன்னிலையில் கூறியும் வருகின்றனர்.

'திராவிடம்' என்ற சொல்லிலிருந்துதான், 'தமிழ்' வந்தது என்று சொல்லுவது சாலவும் பொருந்தும்' என்று கால்டுவெல் கூறுகிருர். அவர்தம் ஆராய்ச்சியாலேயே விளக்குவாம்.

"'திராவிடம்' என்ற சொல்லின் பழைய வடிவம் அல்லது மிகவும் பரந்து பட்டு வழங்கிவந்த வடிவம் 'திரமிடம்' என்பது. 'தமிழ்–திராவிடம்' என்ற இரு சொற்களின் தொடர்பு அறிந்துகொள்வதற்கு முதற்படியாக உதவுவது இச்சொல்லேயாம். இரு சொற்களும் தமிழின்கண் வழக்கிலுள்ளன. என்ருலும் இலக்கிய வழக்காகச் சிறப்பித்துத் தமிழ் நிகண்டு

## இலக்கியங் கண்டதற்கு இலக்கணங் காண்போம்!

களில் முதலிடம் பெறுவது 'திரமிடம்' என்பதே.

இனி வராகமிகிரரின் பிருகத் – சம்கிதையின் ஏட்டுப் பிரதிகள் சிலவற்றில் திராவிடம் என்பதற்குப் பதிலாகத் 'திரமிடம்' என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது என அறிஞர். கெர்ன் (Dr. Kern) என்பவர் கூறுகின்ருர்.

தாரநாதர் என்பவரால் கி. பி. 1573-ல் எழுதப்பெற்ற, 'இந்தியாவில் புத்தமத வளர்ச்சியில் திபேத்தியர்பங்கு' என்ற நூலின் கண் திராவிடர்கள்;–'திரமிளர்கள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பண்டைய மலையாளப் புராணங்களிலும் இதே உருவந்தான் பலவிடங்களிலும் காணப்படுவதாக அறிஞர். குண்டர்ட் (Dr. Gundert) என்பவர் கூறுகின்ருர்.

மகா வமிசத்திலுள்ள பாலியில் 'தமிலோ' என்ற வடிவம் வந்து, பின்னர் 'தாமிலோ' என்ருயிற்று. முதலெழுத்தாய 'D' தமிழின்கண் 'T' என்ருனதால் தற்போதைய வழக்கான 'தமில்' அல்லது 'தமிழ்' என்ருயிற்று; என்ருலும் பிறமொழியினின்று தமிழின்கண் அமையும் போது 'தமிழ்' ஒலிமுறை பிறழ்ந்து அமைந்துள்ளது.

'த்ர' என்ற வடசொல் பிராக்கிருத மொழியின்கண் 'த' என்ருகும். (எ.டு) த்ரோகா–தோகா. அங்ஙனமே 'ச்ர' என்பது 'ச'கரமாகின்றது. தமிழின்கண்ணும் இதற்கு நல்ல காட்டுளது. 'ச்ரமணர்' என்ற சமண சந்நியாசிகளைக் குறிக்குஞ்சொல் 'சமணர்' எனத் தமிழில் வழங்குதலைக் காணலாம். இன்னும் வடமொழியினுள்ளேயும் மகர வகரங்கள் தம்முள் மாறி வழங்கப்படுதலைக் காணலாம். (எ.டு) 'தமாங்க்ஷா' (காக்கையைக் குறிக்கும்) 'தவாங்க்ஷா' எனவும் வழங்கப்படுகிறது. இடைச்சொற்களில் சிலவும் இவ்வாறு மாறி வழங்குதல் உண்டு. சிறிது அதிகமாக வேறுபட்டுக் காணப்படுவது 'திராவிடம்' என்பதன் கண்ணுள்ள 'ட'கரமும் 'தமிழ்' என்பதன் கண்ணுள்ள 'ழ' கரமுமேயாம். ஆனல் இவைகளும் மரபினடியாலே மாறுகின்றன என்பதை 'Sounds' என்ற பகுதியின்கண் யாம் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

வடமொழியிலுள்ள 'நாடி' என்பதை ஒப்பிட்டுப் பார்க்குங்கால், தமிழின் கண்ணது 'நாழி'யாகவும், மலையாளத்தில் 'நாளி'யாகவும், மாறுவதைக் காணலாம். இதைப் பற்றிய நல்லதொரு விளக்கம், 'தமிழ்'–சோழமன்னர்கள்' என்ற பகுதியின் கண் தரப்பட்டுள்ளது. வடமொழியினவாகக் கூறப்படும் அசோகனது கல்வெட்டுக்களில், 'சோழர்' என்ற பெயர் 'சோடா' என்றும், வழுக்காய வடமொழியில் 'சோளா' என்றும், தமிழின்கண் 'சோழர்' என்றும், தெலுங்கில் 'சோளர்' என்றும் காணப்படுகிறது. தெலுங்குக் கல்லெழுத்துக்களிலோ இது அசோகனது கல்லெழுத்துக்களிலுள்ளதைப்போன்றே 'சோடா' என்று காணப்படுகிறது. 'D' என்பது 'T' என மாறி வழங்குதல் தமிழின் மொழி முதலெழுத்துக்களின் ஒலியமைப்பிற்கு இன்றியமையாததொரு இலக்கணமாகும். ஆனல் முதன்முதல் வந்த டேனிஷ் நாட்டுப் பாதிரிமார்கள் இம்மொழியைக் குறிப்பிட்ட 'லிங்குலா தமுலிகா' என்ற பெயரின் அடைப்படை யொலியில் பெரிதும் ஒருமைப்பாடு இருக்கின்றதாக யாம் கருதுகின்ருேம்.''

கால்டுவெல் சொல்லும் இவ்வாராய்ச்சி அறிஞர்கள் பெருமக்களால் ஒத்துக்கொள்ளப்படாதவொன்று. 'சேர–சோழ–பாண்டியர்' என்ற பழந்தமிழ்ச் சொற்களையும் கால்டுவெல் வடமொழிச் சொல்லென்று கூறுகிருர். இக்கூற்றிலிருந்து அவர்தம் அவ்வாராய்ச்சியையும் பொருந்தாதென ஒதுக்கிவிடலாம். 'திராவிடம்'என்பதிலிருந்தா 'தமிழ்' தோன்றியிருக்கமுடியும்?

'திராவிடம்' என்பதைக் கால்டுவெல் அறிஞர் மட்டுமல்ல; தாய்நாட்டுப் பெருமக்களும் சிலர் வடமொழிச் சொல்லென்று கூறுகின்றனர்.

தமிழ் மொழிக்கே மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படும் நூல் தொல்காப்பியம். அவ்விலக்கணத்திலே, 'திராவிடம்' என்ற சொல்லுக்குக் **குறிப்பாகப் புணர்ச்சிவிதி கூறப்பட்டுள்ளது.**

வடமொழியிலிருந்து திராவிடம் வரவில்லை – தமிழ்மொழியிலிருந்தேதான் வந்திருக்கிறது.

'திராவிடம்' என்ற சொல்லைப் பிரித்தால், 'திரு–இடம்' என்று நிற்கும். இப்படிப் பிரித்ததைக் கண்டவர்கள், கீழ்க்காணுமாறு விதி கூறுவார்கள் :–

திரு–இடம்—'திருவிடம்' என்று வகரஉடம்படு மெய் பெற்றுத்தான் வரும். 'திராவிடம்' என்று வராது.

**'எல்லா மொழிக்கு முயிர்**
**வரு வழியே**
**உடம்படு மெய்யின் உருபு**
**கொளல் வரையார்'**

–தொல். எழு. இளம்பூரணம் 141
–தொல். எழு. நச்சினர்க்கினியம் 140

''அவை யகரமும்–வகரமும் என்பது, முதல் நூல்பற்றிக் கோடும்.

**'உடம்படுமெய்யே யகார**
**வகாரம்**
**உயிர்முதன்மொழி வருஉங்**
**காலையான'**

எனவும்,

**'இறுதியும் முதலும்**
**உயிர்நிலை வரினே**
**உறுமென மொழிப**
**உடம்படு மெய்யே'**

எனவும் கூறினுராகலின்'' என்று நச்சினர்க்கினியர் விளக்கந் தருகின்ருர்.

மேலைத் தொல்காப்பிய சூத்திரத்திற்கு உரைவிளக்கந் தந்த இளம்பூரணர்; 'உரையிற் கோடல் என்பதனல், உடம்படுமெய்யாவன யகரமும் வகரமும் எனக் கொள்க. இகரவீறும் ஈகாரவீறும் ஐகாரவீறும் யகர உடம்படுமெய் கொள்வன. அல்லனவெல்லாம் வகரமெய் கொள்வன' என்று தெளிவுபடுத்துகின்ருர்.

இளம்பூரணருடைய இவ்வுரை விளக்கத்தை நன்னூற் பவணந்தியார் ஒரு நூற்பாவாகவே அமைத்துத் தந்துள்ளார்.

**''இ ஈ ஐ வழி யவ்வுமேனை**
**உயிர்வழி வவ்வுமே**
**முனிவ்விருமையும்**
**உயிர்வரின் உடம்படு**
**மெய்யென்ருகும்''**

–நன்னூல் 162

என்பது அந்நூற்பா.

மேற்காட்டிய சான்றுகளின்படி 'திரு–இடம்—திருவிடம்' என்றுதான் புணரமுடியும். 'திராவிடம்' என்று புணரமுடியாது. தமிழ் இலக்கணமே அதற்கு இடந்தராது'' என்று திட்டமாக நிலைநாட்டுவர். அவர்கட்கு மொன்று கூறிக்கொள்கிறேன்.

'திரு–இடம்' என்பதில் 'திரு' என்ற நிலைமொழி, முற்றுகரச் சொல். 'இடம்' என்பது பெயர்ச்சொல்.

'அது–அன்று' என்பதில் 'அது' வென்பது சுட்டெழுத்தினை முதலாகவுடைய முற்றுகரச் சொல். 'அன்று' என்பது எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று. இவ்விரண்டு சொல்லும் புணரும்பொழுது, 'அதா அன்று' எனப் புணரும். இச்சொல் செய்யுளுக்கே உரித்தென்பது இலக்கண விதி.

'திரு–அது' என்ற இருசொல்லும் ஒரு விதத்தில் ஒற்றுமைப்பட்டும்; மற்ருெரு விதத்தில் வேற்றுமைப்பட்டும் இருக்கின்றன. 'திரு'வென்பதும் முற்றுகரம். 'அது'வென்பதும் முற்றுகரம். 'திரு'வென்பது பண்பு மொழி — 'அது'வென்பது சுட்டு மொழி. இரு சொற்களிலும், வருமொழியிலொன்று பெயர். மற்ருென்று குறிப்புவினைமுற்று.

இவ்வகை வேறுபாடுகளிருப்பினும், வருமொழி முதலெழுத்துக்கள் இருசொற்களிலும் உயிரெழுத்தாகவே இருக்கிறது. இது நோக்கத்தக்கது.

அது – அன்று — அதா அன்று – அதான்று; என்று புணரும்பொழுது, திரு–இடம்—திராவிடம் என்று ஏன் புணரமுடியாது? நிலைமொழி ஈற்றிலுள்ள உகரங்கெட்டு, அத்தகரவொற்றின்மேல் ஆகாரமேறி 'திரா' வென்ருகி, வகரஉடம்படு மெய் பெற்றுப் புணர்ந்துள்ளது. (திராவிடமென்று.)

சுட்டின்முன்,

**''அன்று வருகாலை ஆவாகுதலும்**
**...............................................**
**செய்யுள் மருங்கின் உரித்தென**
**மொழிப''**

–தொல். எழுத்து–259

இவ்விதியையே நன்னூலார்,

**''அதுமுன் வருமன்ருன்**
**ருந் தூக்கின்''**

–நன்னூல் 180

என்று கூறுகின்ருர்.

எனவே, இவ்விதியையும் இதற்குக் கொள்ளலாம். ஒரு சொல் அந்நெறிப்படி புணரும்பொழுது மற்ருெரு சொல் புணரமுடியாது என்று எங்ஙனமுரைக்க முடியும்? வழிகாட்டியாக 'அதான்று' என்பது நின்று துணை செய்கிறது.

'அதான்று' என்பது பொதுவகையாற் புணர்ந்த சொல்லல்ல. சிறப்பு வகையாற் புணர்ந்த சொல்லாகும். சிறப்பு நூற்பாவின் விதியை இதற்கெப்படிக் (திராவிடம்) கொண்டு பொருத்தமுடியும்' என்று கூறுவோர் உளராவெனின்; தொன்றுதொட்டு வருமுரையாசிரியர்கள் அனைவரும் நூற்பாவிற்கு உரை வகுப்பதோடு மட்டுமமையாது, உத்திகளில் ஏதாவதொன்றை வைத்துத் தன் கருத்தைக் கூறுதலுமுண்டு. அங்ஙனங் கூறியவிடம் தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் ஏராளம். உரையிற்கோடல் என்பதனல், 'திராவிடம்' என்பதையும் யாம் ஏன் கொள்ளுதல் கூடாது? இதைக் கொள்ளவில்லையெனில், மற்றைய உரையாசிரியர்கள் கூறுவதை எங்ஙனங் கொள்ள முடியும்? கொள்ளமுடியாதென்பதே கருத்தாகக் கொள்க. அது வேண்டுமெனில் இதையு மேற்றுத்தாகை வேண்டும். இல்லையெனில் இதையும்வெறுத்தொதுக்கிவிடலாம். அன்றேல்,

தமிழ் மொழியில், இலக்கியத்திற்குத்தான் இலக்கணமே தவிர; இலக்கணத்திற்கு இலக்கியமல்ல.

'இலக்கியங் கண்டதற்கிலக்கணமியம்பலில், என்று பவணந்தியார் கூறுகிருர்.

**'இலக்கிய மின்றி**
**இலக்கண மின்றே**
**யிலக்கண மின்றி**
**யிலக்கியமின்றே**
**எள்ளி னின் றெண்ணெ**
**யெடுப்பது போல**
**விலக்கியத்தின் வின்**
**றெடுபடு மிலக்கணம்'**


என்பது, அகத்தியச் சூத்திரமாகக் கருதப்படுகிறது.

இம்முறைப்படி, யாமும், 'திராவிடம்' என்ற இலக்கியத்திற்கு இலக்கணம் வகுப்போம்.

**'திருமுன் வருமிட**
**மான்ருமிரிடத்தும்'**

என, நூற்பா செய்துகொள்ளலாம். அதுதானே, தமிழனின் தனிப் பண்பு!

–க. சி. இராசியண்ணன்.




"இனி என்னல் ஓர் அடிகூட எடுத்து வைக்கமுடியாது......" என்ற கூறிப் பெருமூச்சுவிட்டான் அமலோற்பவநாதன்.

"ஆமாம், இங்கேயே எங்காவது ஒரு சத்திரத்தைப் பார்த்து உட்கார்ந்து நமதுசாப்பாட்டுக்கடையை ஆரம்பிக்க வேண்டியதுதான் என்று ஆமோதித்தான் அறவாழி.

"நீங்கள் இரண்டு பேரும்சொன்னதை நான் ஏன் எதிர்க்கப் போகிறேன்? நானும் அதைச் சொல்லத்தான் விரும்பினேன்..." என்று கூறினேன் நான். சிறிது தூரம் நடந்து சென்ற பிறகு, வழியில் இருந்த ஒரு சத்திரத்தில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தோம். எங்கள் பயணத்தில் கண்ட சுவை மிகுந்த காட்சிகளையும், செய்திகளையும்பற்றி பேசிக்கொண்டே உண்டோம்.

நாங்கள் மூவரும் தமிழ்நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து கலை, இலக்கியம், தமிழ், பண்டையப் பழக்க வழக்கங்கள், ஆதிகுடிகள் முதலியவற்றைச் சேகரித்து ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஒருபெரியஆராய்ச்சி நூல் தயாரிக்க முடிவு செய்திருந்தோம். அதன்படி ஒவ்வொரு ஊராகச் சுற்றிச் சென்று, விஷயங்களைக் குறித்துக்கொண்டும், புகைப்படம் எடுத்தும் வந்தோம். அமலோற்பவநாதன் என்ற பெரிய பெயரைக் கொண்ட அ. நாதன், அண்ணமலை பல்கலைக் கழகத்தில் தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றவன்; நான் அதே கல்லூரியில் பொருளாதார எம். ஏ. பட்டம் பெற்றிருந்தேன். நாங்கள் மூவரும் இந்தப் பணியில் எங்களைப் பிரியாமல் மிகவும் ஆவலுடன் ஈடுபட்டிருந்தோம்.

நாங்கள் இந்த ஊருக்கு வரும் வழியில் ஒரு சிலையைக் கண்டோம். விசித்திரமான அமைப்பில் இருந்த அந்தச் சிலை எங்களிடையே பலத்த வாக்குவாதத்தை ஏற்படுத்தியது. உண்மையைச் சொன்னல் அது ஆணு, பெண்ணு என்ற ஆராய்ச்சியில் நாங்கள் ஈடுபட நேரிட்டது. ஒருபுறம் பார்த்தால் ஆண் போலவும், மறுபக்கம் பார்த்தால் பெண் போலவும் தோன்றிய அதிசயமான சிலை அது!

"அந்தச் சிலை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? அதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டும்? ஆகவே தான் அதை ஆணுகப் பாதியும், பெண்ணுகப் பாதியும் உருவாக்கியிருக்கிறுர்கள் என்று நான் நினைக்கிறேன்..." என்றேன் நான்.

"இல்லை. அது பெண்ணின் சிலை தான். எனக்கு நிச்சயமாகத் தெரியும்..." என்றுர் அ. நாதன்.

"அது ஆணின் சிலை என்று நான் சொல்கிறேன்" என்று இடைமறித்தார் அறவாழி.

எனக்கு வியப்புத் தாங்க முடியவில்லை. என்னேடுகூடவே வந்த இருவர், இதற்குள் எப்படி இதைப் பற்றி முடிவு கட்டியிருக்கமுடியும் என்பதை என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை. இவர்கள் சொல்வதைக் கேட்டுப் பிறகு முடிவு பண்ண விரும்பினேன்.

"உமக்கு எப்படி ஐயா, இது பெண் சிலை என்று தெரியும்?" என்று நாதனைக் கேட்டேன்.

"எனக்கு நிச்சயமாகத் தெரியும். கதையைக் கூறுகிறேன். கேளுங்கள், பிறகு அறவாழி கூறட்டும்" என்று கூறி கதையை ஆரம்பித்தார் அ. நாதன்.

இந்தப் பெண்ணின் சிலையை இங்கே வைக்கக் காரணமாயிருந்தவள் **அன்னி மிஞிலி** என்ற பெயர் கொண்ட ஒரு பெண். இவள் வீரத்தின் உறைவிடம் என்று சொல்வது மிகை ஆகாது. தான் எடுத்த சபதத்தை நிறைவேற்றி நீங்காப் புகழ்பெற்ற ஒரு வீர மகள். அழகும் வீரமும் ஒருங்கேஅமையப் பெற்ற இவள் தந்தைக்கும் ஊர்க் காவலனுக்கும் ஓர் அற்ப விஷயமாய்ச் சச்சரவு நேரிட்டது. இவளது தந்தையின் பசுக்கள் கோசர்களின் நிலங்களில் புகுந்து,பயிரைமேய்ந்து பாழ் செய்துவிட்டனவாம். அதற்காக ஊர் முதுகோசர் சினம் கொண்டு இவளது தந்தைக்குத் தகுந்த தண்டனை தர முடிவுசெய்து ஒரு நாள், அவர் தன்னை மறந்திருந்த சமயத்தில், அவரது கண்களைப் பிடுங்கிவிட்டனர்.

தன் கண் போன்ற தந்தையின் கண் போனதைக் கேள்விப்பட்ட வீர மகள் அன்னி மிஞிலி வெகுண்டெழுந்தாள்; வீரத்தின் உருவாய் நின்று ஒரு சபதம் எடுத்தாள். தன் தந்தையின் கண்களைப் போக்கிய புல்லர்களை ஒழிக்க முடிவு செய்தாள். சபதம் முடியும்வரை தான் அணிந்துள்ள புடவையை மாற்றிக்கொள்வதில்லை எனவும், வெள்ளை நிறமுடைய புடவை அணிவதில்லை என்றும், கலத்தில் உண்பதில்லை என்றும் அவள் சபதம் செய்துகொண்டாள்.

எப்படி முதுகோசரை ஒழிப்பது என்பதிலேயே அவள் சிந்தையெல்லாம் செலவாகியது. அக்காலத்தில் அழுந்தூரில் **திதியன்** என்று பேர் கொண்ட ஒரு மாவீரன் வாழ்ந்தான். அவன் தோள் வலியும், வாள் வீச்சும் எல்லார் நாவிலும் நடனமாடிக்கொண்டிருந்தன. அன்னி மிஞிலி அவனிடம் சென்று தன் குறைகளைக் கூறி, தன் தந்தைக்கு இழைத்த தீங்கிற்குப் பழி வாங்குவதென்று முடிவு செய்தாள். உடனே அழுந்தூருக்குப் புறப்பட்டுச் சென்று திதியனைக் கண்டாள்; சேதியினைச் சொன்னுள். அன்னி மிஞிலி தந்தைபால் வைத்திருந்த அன்புப் பெருக்கையும், வீரச் சபதத்தையும் உணர்ந்த திதியன் அவளுக்கு எப்படியும் உதவி செய்வதாக வாக்களித்து அவளைப் போகச் சொன்னுன்.

திதியன் உடனே முதுகோசர்மீது படையெடுத்து அவர்களைப் புறங்காட்டச் செய்தான்; முதுகோசர் போரில் மரணமடைந்தார். அன்னி மிஞிலி போர்க்களத்திற்கு வந்து திதியனுக்குத் தன் நன்றியைத்தெரிவித்துக்கொண்டாள்; அவள் சினம் அடங்கியது கண்டு திதியன் மனம் மகிழ்ந்தான். அன்னி மிஞிலி உவகைமிகுந்து காதில் குழை அணிந்து அழுந்தூரில் உலவித் திரிந்து மகிழ்ச்சிப் பெருக்கில் கூத்தாடினுள். அவள் சபதம் நிறைவேறியதும் கலத்தில் உண்ணவும், வெள்ளை உடை உடுக்கவும் துவங்கினுள்.

இத்தனை வீரம் கொண்ட அந்தப் பெண்ணின் நினைவாக அவள் மரணத்திற்குப் பிறகு ஒரு சிலைவைக்க முடிவு செய்தார்கள். அந்தச் சிலையே இது. மெல்லிய உடல்; பல நாட்கள் உண்ணுமலிருந்ததால் ஏற்பட்ட இளைத்த உருவம்; கசங்கிய உடை; காதில் குழை. இதுவே அன்னி மிஞிலியின் சிலை; இது ஒரு பெண்ணின் உருவம் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

அ. நாதன் தன் கதையைக் கூறி முடித்தார். அறவாழி ஆரம்பித்தார், தன் கதையை.

**அன்னி** என்பவன் ஒரு வீரன். அவன் அழுந்தூரில் ஆண்டு வந்த திதியன் கோபத்திற்கு ஆளானுன். திதியனது காவல் மரமாகிய ஒரு புன்னை மரத்தின்மீது ஆவல் கொண்டு அது நன்ருகப் பூத்திருந்த போது, அதனை வெட்டிச் சாய்த்தான். காவல் மரத்தை வெட்டியதைக் கேட்ட திதியன் அன்னிமீது கடும் கோபம் கொண்டு அவனேடு சண்டையிட்டான். அப்போரில் திதியன் வெற்றி பெற்றுன்; அன்னியின் கண்களைப் பிடுங்கிவிட்டான். கண்ணிழந்த அன்னி ஒருவாறு ஊர் வந்து சேர்ந்தான்.

தன் தந்தைக்கு நேர்ந்த கதியைக் கண்ட அன்னியின் மகன் **மிஞிலி** என்பவன் கடும் கோபம் கொண்டு வெகுண்டு எழுந்தான். தன் தந்தையை இக்கோலத்திற்கு ஆளாக்கியவனை எக்காலத்திலும் விடாமல், பழி வாங்காமல் இருத்தல் கூடாது என்று சபதம் கொண்டான். தன் சபதம் நிறைவேறும் மட்டும் கலத்தில் உண்பதில்லை, வெள்ளை உடைகளை உடுப்பதில்லை என்று முடிவு செய்தான். அதற்கேற்றபடி படைகளைச் சேர்க்கத் தொடங்கினுன். அக்காலத்தில் வாழ்ந்த **குறும்பியன்** என்ற மற்ருெரு சிற்றரசனேடு நட்புக்கொண்டு, திதியனுக்கும் தனக்கும் உள்ள பகையைத் தெரிவித்தான். இருவரும் ஒன்று சேர்ந்து திதியன்மீது போர் தொடுத்தனர்.

போரில் இருவரும் ஒன்று சேர்ந்ததால் திதியன் தோற்றதில் வியப்பில்லை. அவனை மரபோடழித்துக் கொல்வித்து மகிழ்ச்சி அடைந்தான் மிஞிலி.திருவழுந்தூர் திரும்பி வெற்றி ஆரவாரத்தோடு உலவினுன். இப்படிப்பட்ட வீரமகனுன மிஞிலிக்குச்சிலையெடுக்க விரும்பிய ஊர்மக்கள் அவனைப்போன்று ஒரு சிலை செதுக்கிவைத்தனர். மெல்லிய உடல்; பட்டினி இருந்து இளைத்த உருவம்; கந்தல் உடை; காதில் குண்டலம்;இத்தனை அணிகளுடன் கூடிய ஓர் உருவத்தைச் செதுக்கி வைத்தனர். இதுவே மிஞிலி என்ற ஆணின் சிலை. இச்சிலை ஆணின் சிலை என்பதற்கு இதைவிட வேறென்ன சாட்சி வேண்டும்?" என்று கூறி அறவாழி அமலோற்பவநாதனைப் பார்த்துக் கேட்டு ஏளனமாய்ச் சிரித்தார்.

எனக்கு யார் சொன்னதை நம்புவது என்று புரியவில்லை. ஒரு சமயம் இருவருமே கற்பனை கலந்து கதை கட்டியிருக்கிறுர்களோ என்ற ஐயமும் இல்லாமலில்லை. மேலும் இரண்டு பேரும்என்னேடு கூடவே வந்திருக்கிறுர்கள். இதற்குள் எப்படி இதைப்பற்றிக் கற்பனை செய்திருக்கமுடியும் என்ற ஐயம் வேறு!

இச்சமயத்தில் உண்டு முடித்தோம். நண்பர்கள் இருவரும் வெளியே சற்று உலவிவிட்டு வர அழைத்தனர். எனக்குச் சாப்பிட்டதும் வெற்றிலை, பாக்குப் போட்டுச் சற்று நேரம் ஓய்வு எடுத்த பிறகு தான் மற்ற வேலைகளைக் கவனிக்க முடியும். ஆகவே நண்பர்களைமட்டும் போகச் சொல்லிவிட்டு வெற்றிலை, பாக்குப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தேன். அமலோற்பவநாதனின் பையில் இருந்த ஒரு புத்தகம் என்னைக் கவர்ந்தது. அதை எடுத்துப் பார்த்தேன். அது அகநானூறு என்ற நூல்; ஓர் ஆசிரியரின் உரை நடையுடன் கூடியது. அதில் ஒரு பக்கம் என் கருத்தைக் கவர்ந்தது. அதில் நீலப் பென்சிலால் ஓரத்தில் கோடிடப்பட்டிருந்தது. அதுபின்வருமாறு:-'இப்பெயர் பெண்பாற் பெயர் எனத் தெரிகின்றது. கொடுங்குழை அன்னி மிஞிலி என்பது காண்க அகம் 196 அன்னி மிஞிலி என்பது பெண்ணென்று கதை கூறியிருக்கிறுர் இவர்.இந்தப் புத்தகத்தைப் படித்ததின் பலன் இக்கதை என்று விளங்கியது; அதே ஆவலில் அறவாழியின் பையைத் துழாவினேன். அதிலும் அகநானூறு என்ற நூல் இருந்தது எனக்கு வியப்பளித்தது; ஆனல் அது வேறு ஆசிரியரின் உரை கொண்டது. அதில் எந்தப் பக்கத்திலாவது கோடிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்துக்கொண்டே போனேன். என்ன ஆச்சர்யம்! ஒரு பக்கத்தில் சிவப்புப் பென்சிலால் கோடிடப்பட்டிருந்தது. அப்பகுதி பின்வருமாறு:- அன்னி என்பவன் திதியனது காவல் மரத்தை விரும்பி, புன்னை மரம் நிரம்பப் பூத்திருக்கும்போது அதனை வெட்டிச் சாய்த்தனன். அது காரணமாகத் திதியனுக்கும் அன்னிக்கும் போர் மூள, அப்போரில் திதியன் வெற்றி கொண்டு அன்னியின் கண்களைப் பிடுங்கிவிட்டான். அவன் புதல்வனுகிய மிஞிலி என்பவன் கடும் சினமடைந்து பரிகலத்துண்ணுமலும் வெளிய உடைகளை உடுக்காமலும் இருந்தான். பின்பு குறும்பியன் என்பவனுல் திதியனை மரபோடழியக் கொல்வித்து திருவழுந்தூரில் பெரிய ஆரவாரத்தோடு சென்று வந்தான் என்பதாம். (அகம் 196) சங்க நூல்களுள் சில ஆசிரியர்கள், பெயர்களைக் கொண்டு அவர்கள் ஆண்பாலரோ, பெண்பாலரோ என அறியக்கூடியவில்லை"

அடடா! இப்போதல்லவா புரிகிறது! இரண்டு பேரும் அகநானூற்றின் இந்தப் பகுதியில் ஒருவரும் அந்தப் பகுதியில் ஒருவரும் மனத்தில் வைத்துக்கொண்டு அந்தவிதமாகக் கதை திரித்து என்னை ஏமாற்றியிருக்கிறுர்கள்.நீலப் பென்சிலால் கோடிடப்பட்டிருந்தவர் அ. நாதன். அவர் பெண் என்று நினைத்துக் கதை கூறினுர். சிவப்புப் பென்சிலால் கோடிட்டிருந்தவர் அறவாழி; அவர் ஆண் என்று நினைத்துக் கதை கூறினுர். கடைசியில் இரண்டு பேருடைய கற்பனைக்கும் காரணமாய் இருந்தது அகநானூறு அல்லவா? எவ்வளவு அருமையாகக் கற்பனை செய்திருந்தார்கள்!

-நா. ஜகந்நாதன், எம். ஏ.

# ★ ராணிப்பேட்டை ★

தெரியாதவைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை பலருக்கு இருப்பதில்லை. பின் அவைகள் தானாகத் தெரிந்தவுடன், இதை இவ்வளவு நாட்களாகத் தெரிந்துகொள்ளாமல் இருந்தோமே என்று வருந்துவோரு முண்டு.

சில ஊர்ப் பெயர்கள். வந்த காரணமே விசித்திரமானது. அவைகளுக்குப் பல கதைகளும், வரலாறுகளும் உண்டு. ஒரு ஊரில் பார்க்குமிடமெல்லாம்மயில்கள் தோகையை விரித்து எழிலாக ஆடிக்கொண்டே இருந்தனவாம். இதைப் பார்த்த ஒரு புலவர் அந்த ஊருக்கு **மயிலாடுதுறை** என்று பெயரிட்டாராம். சீதையைக் கண்டு வந்த அனுமன், ராமனிடம் வந்து 'கண்டேன் தேவியை' என்றானாம். முதலில் அப்படிச் சொன்ன அந்த இடத்திற்குப் பெயர்தான் **கண்டதேவி** என்று இன்றும் வழங்கி வருகிறது. இது எந்த அளவில் உண்மையென்பதிருக்கட்டும். ஆனால் சில ஊரின் பெயர்கள் காரணமில்லாமல் இருப்பதில்லை. அப்படிக் காரணத்தோடு சரித்திர ஆதாரத்தோடு வழங்கி வருகிற ஊர்கள் பல உண்டு.

செஞ்சிக் கோட்டையை ஆண்டு வந்த தேசிங்குராஜன்மீது, எப்பொழுதும் ஒருகண் வைத்துக்கொண்டு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தான் செஞ்சியைத் தன் வசமாக்கிக் கொள்ள திட்டமிட்டிருந்த ஆற்காட்டு நவாப். நவாப்பின் திட்டம் நிறைவேறுதபடி செஞ்சிக்கோட்டையைப் பாதுகாத்து வந்தான் தேசிங்குராஜனின் உயிர்த் தோழன் மகமத்கான். திடீரென்று நவாப்புக்குச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. ஆம்! மகமத்கானுக்குத் திருமணம் கோலாகலமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள நினைத்தான் ஆற்காட்டான்.

முதன் முதலாக வாழ்க்கைப் பூங்காவிற்குள் நுழையும் மகமத்கானோ வாலிபன். கன்னியின் கடைக்கண் பார்வையில் மயங்கிக் கிடப்பான். கனியின் சுவை தீருகிறவரை கண்ணைத் திறக்கமாட்டான், அதற்குள் நம் கொடியைக் கோட்டையில் பறக்க விட்டுவிடலாம் என்ற தப்புக் கணக்கோடு செஞ்சிநோக்கி படையுடன்வந்துகொண்டிருந்தான் நவாப்! புறவிகள் கிளப்பும் புழுதிப் படலம் செஞ்சிக் கோட்டையை நோக்கி வந்துகொண்டிருக்கும் செய்தி, தனிமையில் இனிமை கண்டுகொண்டிருந்த மகமத்கானின் காதுக்கு எட்டியது. துள்ளியெழுந்தான், தோகையே விடை கொடு! என் தோழனுக்கு ஆபத்துநெருங்கிக்கொண்டிருக்கிறது. மடை திறந்தாற்போல் படையோடு வருகிறான் ஆற்காட்டான். அவனைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்துவிட்டு அடுத்த வினாடியே இங்கு வருகிறேன். மறுக்காதே என்று மணப்பெண்ணின் கரங்களைப் பிடித்துக் கொண்டே விடை கேட்டான் மகமத்கான். அவள் கண்ணீரை ஆறுகப் பெருகவிட்டாள்! அம்மம்மா! எனக்குப் பயமாக இருக்கிறது! போட்ட மாலையைக் கழட்டுவதற்குள் போர்க்களமா? போக வேண்டாமெனத் தடுத்தாள்.

அன்பே! தடுக்காதே! மகமத்கானுக்கு இன்றுதான் திருமணமாகியிருக்கிறது. அவன் மதுவருந்தி, மஞ்சத்தில் மனைவியோடு மயங்கிக் கிடப்பான். இந்தச் சந்தர்ப்பத்தில் செஞ்சிக்கோட்டையைத் தகர்த்தெறிந்துவிடலாம் என்று திட்டம் போட்டு வருகிறான் ஆர்காட்டான். அவனை வழியிலேயே திருப்பி அனுப்பிவிட்டு,வெற்றியோடு இங்கு வருகிறேன் என்று கூறிவிட்டு புயலெனக் கிளம்பினான் மகமத்கான். இதற்குள் நவாப்பின்படை செஞ்சிக் கோட்டையை நெருங்கிவிட்டது.

தேசிங்குராஜன் தன் படைகளைக் கோட்டை வாயிலில் நிறுத்தி போருக்குத் தயார் செய்துவிட்டு, முறைப்படி தன் மனைவிராணியிடம் விடை பெற்று வரச் சென்றான். மகிழ்ச்சி பொங்கும் முகத்தோடு ராணி வரவேற்றாள்!

"ராணி! உறையிலே சிறை கிடந்தவாளுக்கு வேலை வந்திருக்கிறது. விடை கொடு, வெற்றியோடு திரும்புகிறேன்" என்று வீர முழக்கம் செய்தான் தேசிங்குராஜன்.

"மன்னா நீங்கள்மட்டும் தானா போகிறீர்கள். நானும் வருகிறேன். நவாப்பை விரட்டியடிக்கும் பணியில் எனக்கும் பங்கு தாருங்கள்" என்று உணர்ச்சியோடு பேசினாள் ராணி!

"ராணி! நாடு காக்கும் உன் வீரத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் என்னுடைய வாளுக்கே இறை போதாதே! நேரமாகிவிட்டது. விரைவிலே விடை கொடு, அடுத்த வினாடியே நவாப்பின் தலையோடு இங்கு வருகிறேன்.

ராணி அவனுக்கு வெற்றித் திலகமிட்டு, சென்று வாருங்கள், வென்று வாருங்கள் என்று வாழ்த்தி வழியனுப்பினாள். தேசிங்குராஜன் ராணிக்கு முத்த மழை பொழிந்துவிட்டு, ரத்த மழை காண செருமுனை நோக்கிப் பறந்தான்.

போர்க்களத்தில் மண மாலையோடு மகமத்கான், நவாப்பின் படைகளைக் கொன்று குவித்துக் கொண்டிருப்பதைத்தேசிங்குராஜன் கண்டான். மகமத்கானின் நட்பும் ராஜபக்தியும் அவன் உள்ளத்தை உருக்கிவிட்டன. தேசிங்கு ராஜனுக்கு ஓய்வு கொடுத்து, நவாப்பின் படைகளைக் கால் பிடரிபட ஓடச் செய்துக்கொண்டிருந்தமகமத்கான், விழி மூடித் திறப்பதற்குள் எதிரிகளால் வஞ்சகமாய்க் கொல்லப் பட்டான்.

மகமத்கானின் தியாகம் தேசிங்குராஜனின் மன உறுதியைக் குலைத்துவிட்டது எனினும், வெறி பிடித்தவனைப்போல் போர் புரிந்து நவாப்பின் படைகளைக் கொன்று குவித்தான் தேசிங்கு! சின்னாபின்னமாகிக் கிடந்த வீரர்களின் பிணத்திற்கிடையே மகமத்கானின் பிணத்தைக் கண்டான். தேசிங்கின் இதயம் வெடித்துவிடும்போல் தோன்றியது. மகமத்கானின் பிணத்தைத் தூக்கி நிறுத்தி மார்போடு சேர்த்து ஆரத் தழுவினான். அப்பொழுது மறைந்திருந்த நவாப்பின் துப்பாக்கி முனையிலிருந்து வெளி வந்தகுண்டு ஒன்று தேசிங்குராஜனின் நெஞ்சு வழியாகப் புகுந்து அவன் உயிரை எடுத்துக்கொண்டு ஓடியது. மகமத்கானை அணைத்தபடியே கீழே சாய்ந்தான் தேசிங்கு.

கணவனின் வீர மரணத்தையும், மகமத்கானின் ராஜ பக்தியையும் தாங்கமுடியாத வேதனையோடு பாராட்டினாள் ராணி! கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். சோகத்தினிடையே வீர மகிழ்ச்சியடைந்தாள். பிறகு தீயைவளர்த்து அதிலே குதித்து வெந்து மடிந்தாள். தான் வீர பத்தினி என்பதை நிலை நாட்டினாள் ராணி!

அந்தக் கற்பரசியின் பெயர் மறைந்துவிடாமல் நிலை பெறும்படி அமைந்த ஊர்தான் **ராணிப்பேட்டை.**

-தேவகோட்டை தினகரன்.




# வெண்பாப் போட்டி

## 25. சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

ஈழம் செழிக்க இனிதுழைத்த செந்தமிழர்
வாழ வழியற்று வாடுவதோ?—தோழனே!
எங்களவர் தொண்டினுக்கு ஏலாப் பரிசந்தோ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—மு. முகம்மது அலி, காரைக்கால்.

❁

செங்கரும்புத் தோட்டத்தே சேர்ந்தமத யானைபோல்
சிங்களவர் சாடிட்டார் செந்தமிழை—அங்குசத்தால்
பொங்குமதம் மாற்றுதல்போல் பொற்புடையாய் நாமணைப்போம்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—பனை. சண்முகம், நெற்குப்பை.

❁

மேலைக் கடல்மிதித்தாய்; மேருமலை உன்னடியில்;
கூலிக்கோ ஈழத்தில் கால்வைத்தாய்?—வேலாக
அங்கம் புகுந்தே அடிவயிற்றில் பற்றுதடா
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—கு. சித்தா, பனப்பாக்கம்.

❁

சீரார் தமிழ்த்திரளைச் 'சீச்சி' எனவிகழ்ந்த
நேரார் நெறியிலா நேருவின்—காரார்
கங்குல் உளந்தன்னைச் சுட்டுக் கருக்காதோ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—ஆ. துரைக்கண்ணு, உப்பிலிபாளையம்.

❁

அதிகாரப் போதையது அத்துமீறித் தூண்ட
சதிகாரர் சிங்களத்தில் துள்ளிக்—குதிக்கின்றார்;
தங்கத் தமிழினத்தைத் தாக்கி எரிக்குதையோ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

❁

சிங்களத்தே வெங்கொடுமைச் சாக்காட்டில் வெந்தேனும்
தங்கமெழில் தாய்த்தமிழைக் காப்பதற்கே—பொங்கியெழும்
சிங்கத் தமிழ்மகனை நாடற்றோன் ஆக்கியதே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—செய்கை-எ. கலியபெருமாள் [illegible], திருவையாறு.

❁

பொங்கும் அலைகடலில் வங்கம் செலுத்தியுல
கெங்கும் புகழ்மணக்கும் எந்தமிழர்—தங்கியுள
சிங்களத்தில் சீரான வாழ்வைச் சிதைத்ததையோ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ..

—குமாரி எம். சரோசினி, சிதம்பரம்.

❁

பொன்னும் மணியும் பொதிபொதியாய் பல்லணியும்
மின்னும் படிசெய்த மென்றமிழா!—இன்றே நீ
சிங்கமெனப் பொங்கி செருநோக்கின் செத்திடுமே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—பசுமலை வீர. முருகேசன், மதுரை.

❁

தீயால் குளிர்ந்திரும் சிற்றுயிருங் கண்விழிக்கும்
ஓயா துரைத்தும் உணராநம்—தூய்தமிழர்
பொங்கி யெழுந்தின்று போர்புரிய வைக்கட்டும்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—கேசரிக்கண்ணன், கோவை.

❁

காடெல்லாம் கால்கடுக்க ஓடிவந்த மானதனைக்
கூடில்லாக் கோவிலங்கு கொன்றதுபோல்-வீடெல்லாம்
மங்காப் புகழுடைய மாத்தமிழை மாய்த்ததுவே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—தே. செல்வராசு, க. வெள்ளாகுளம்.

❁

கொஞ்சுபுகழ் காட்டுமென் கோலத் தமிழ்த்தாயை
நெஞ்சாற நான்மறந்து நின்றேனே—அஞ்சுகமே!
வெங்களத்தில் போராடி வெல்லத் தூண்டுதடி
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—நா. இளங்கீரன், திருவையாறு.

❁

ஈழத்துப் பொன்னுடை; இன்னமுதத் தென்புலவன்
காழகத்தை வென்றிட்ட நம்பிறப்பு—விழத்தான்
வெங்கொலைஞர் எண்ணம்போல் ஈழத்தில் மூண்டதடா
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—அரும்பு, அம்மாபட்டி.

❁

அங்கிங் கெனதபடி எங்கும் இருந்தசிவன்
திங்கணுதல் தீஎன்றே தீர்ந்ததுவே!—எங்களவர்
அங்கர(சு) ஆளாமுன் ஆறிடுமோ நெஞ்சினிலே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—அ. செகதீசன், ஆரியூர்.

❁

உள்ளம் குமுறும்தீ ஊரெல்லாம் தாவும்தீ
பொல்லா இனவெறியால் பொங்கும்தீ—அல்லலுறும்
செந்தமிழர் ஈழத்தில் சீரழியப் பாயும்தீ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—முசுமன், கோவை.

❁

மான மிழந்தார் மதிப்பதுவும் தானிழந்தார்
ஊன மடைந்தார் உயிரிழந்தார்—தென்னிலங்கைச்
செந்தமிழர் நல்வாழ்வைச் சீரழியச் செய்ததுவே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—மு. செ. குமாரசாமி, இராயகிரி.

❁

தோளுயர்த்திச் செல்வாய்; தொகையாய் அணிவகுத்து
வாளுயர்த்திப் போரிடுவாய்; வண்டமிழா!—ஈழமதில்
உங்களவர் வாழ்வை அழிக்கப் பரவுதடா
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—எழிலூரான், சுந்தராபுரம்.

❁

பொங்கி எழில்சிந்தும் பூஞ்சோலை போல்ஈழம்
எங்கும் வளம்பெறவே செய்தமிழர்—தம்வாழ்வில்
சிங்கந் தனையெழுப்புஞ் சிற்றெறும்பு போன்றதுவே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—ச. குருசாமி, தூத்துக்குடி.

❁

கற்பிழந்தார் பொற்பழிந்தார் கைமையுற்றார் கைத்திறனால்
அற்பர்க்கு வாழ்வீந்தார் வாழ்வொழிந்தார்—நற்புகழ்சேர்
சங்கத் தமிழாளக் கேட்டதனால் இத்தனையும்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—பெ. அ. இளஞ்செழியன், பெருவளப்பூர்.

❁

சிங்கத் தமிழாநீ சீர்குலைந்து போகும்முன்
தங்கத் தமிழுரிமை தான்பெறுவாய்—சிங்களத்தில்
பங்கம் பெருகுதடா! பற்றி எரியுதடா!
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—அன்பின் ஒளி, தஞ்சை.

❁

கொஞ்சமும் ஈவின்றி கோலோச்சும் ஈழத்தில்
பஞ்சையென நம்மவரைப் பாழ்படுத்த—நெஞ்சினிலே
பொங்கிவரும் நல்லின்பம் போயொழியச் செய்ததுவே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—நடனதாசன், சுந்தராபுரம்.




★

எங்கும் கிடைக்கும்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு